# கல்முனைக்குடி

# ஜும்ஆ பள்ளிவாசல்

# வரலாறு




ஆசிரியர்கள்:
- ஹாஜி உஸ்மான் சாஹிப்
- எஸ். ஆதம் பாவா (அதிபர்)

910.04
ரோஷிப்

இந்நூலுக்குரிய அன்பளிப்புகள் யாவும் கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்மாணப் பணிக்கு வழங்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கல்முனை
02-4-1996
මහජන පුස්තකාලය
කල්මුනේ

# கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் வரலாறு

ஆசிரியர்கள்:
– ஹாஜி உஸ்மான் சாஹிப்
– எஸ். ஆதம்பாவா (அதிபர்)

இந்நூலுக்குரிய அன்பளிப்புகள் யாவும்
கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்மாணப் பணிக்கு வழங்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14170

ACCESSION NO:
CLASS NO: 910.014

## BIBLIOGRAPHICALDATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | THE HISTORY OF THE KALMUNAIKUDY JUMMAH MOSQUE - KALMUNAIKUDY JUMMAH PALLI VASAL VARALARU. |
| Authors | : | HAJI USMAN SAHIBO & S. ADAMBAWA (Principal) |
| Language | : | TAMIL |
| Edition | : | FIRST |
| Date of Publication | : | SEPTEMBER 1993 |
| Copy Right Holders | : | AUTHORS |
| Printer | : | GOODWIN AUTO PRESS - KALMUNAI. |
| Publishers | : | AUTHORS |

14170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

கல்முனைக்குடி ஜும்ஆ பள்ளிவாசல்
பிரதம இமாமும் கதீபுமாகிய

## அல்ஹாஜ் மௌலவி S. L. ஷம்சுத்தீன் (பாரி) அவர்கள்

*வழங்கிய*

# அணிந்துரை

அல்லாஹ்வைப் புகழ்ந்து, அவனுடைய தூதர்கள் மீதும், நல்லடியார்கள், மற்றுமுண்டான முஸ்லிம்கள் மீதும் சாந்தியும், சமாதானமும் சொல்லியபின் -

எனதன்பிற்குரிய கல்முனைக்குடி வாழ் இஸ்லாமியப் பெருங்குடி மக்களே, அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

சகோதரர்கள் ஹாஜி உஸ்மான் சாஹிப், எஸ். ஆதம்பாவா (அதிபர்) ஆகியோரால் எழுதப்பட்ட இந்நூலின் கையெழுத்துப் பிரதியினை நான் பார்வையிட்டேன். அல்ஹம்து லில்லாஹ்.

நம்முடைய ஊர்ப் பெரிய பள்ளிவாசலின் வரலாறு, எம்மில் அநேகருக்கு இதுவரை தெரியாமலே இருந்து வந்தது. இப்போது இப்புத்தகத்தின் மூலம் அக்குறை நீங்கி, இவ்வூர் வாழ் மக்கள் எல்லோரும் இலகுவில் புரிந்துகொள்ள வாய்ப்பேற்பட்டிருக்கின்றது.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை ஓர் ஊரின் இருதயம் ஜும்ஆ பள்ளிவாசல் என்றால் அது மிகையாகாது. இதுபற்றி அல்லாஹ்வும், ரசூலும் அதிகமாகக் கூறியுள்ளனர்.

எம்முடைய பள்ளிவாசலின் ஆதாரபூர்வமான வரலாறு இதில் அடங்கியுள்ளது. அத்துடன், பள்ளிவாசல்கள் பற்றிய குர்ஆன், ஹதீஸ் மற்றும் பிறமத அறிஞர்களின் கூற்றுக்கள் போன்ற அநேக விடயங்கள் இதில் அடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசல் சொத்துக்கள், உறுதி இலக்கங்கள், குடி வழிமுறைகள்; அதன் சின்னங்கள், முன்னுண்டான மரைக்காயர்களின் விபரங்கள், மற்றும் ஆவணங்கள் ஆகியவை இதில் படங்களுடன் அமைந்திருப்பதால் இது இவ்வூர் வாழும் ஒவ்வொரு குடிமகனுடைய இல்லத்திலும் பாதுகாத்து வைக்கப்படவேண்டிய ஒரு பொக்கிஷமாகும்.

மேலும் இப்பிரதேச முஸ்லிம்களின் பூர்வீக வரலாறும் சரித்திர ஆதாரங்களோடு இதில் இடம்பெற்றுள்ளது மிகவும் சிறப்பிற்குரியதாகும்.

இப்புத்தகத்தின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் யாவும் நமது பள்ளிவாசல் புனர் நிர்மானப் பணிக்கே உரிமையாக்கி இருப்பதால், எமதூர் முஸ்லிம் சகோதர சகோதரிகள் ஒவ்வொருவரும் எவ்வளவு கூடுதலாகத் தங்களுக்குக் கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்து, ஒரு புத்தகத்தை வாங்கி உதவுவது உங்கள் மீதுள்ள நீங்காக் கடமையாகும்.

அப்படி ஒரு புத்தகத்தை நீங்கள் வாங்கி விட்டால் மட்டும் போதாது, பின்னர் அப்புத்தகத்தில் எழுதி, கிழித்து நாசமாக்கி விடாமல் அதனைப் படிப்பதோடு, பாதுகாத்து வைத்து உங்கள் பிற்காலச் சந்ததியினருக்கு விட்டுச் செல்ல வேண்டும்.

இது பெறுமதிவாய்ந்த நூல், அதன் பெறுமதி சாதாரண மக்களுக்குப் புரியாது. பெரும் வரலாற்றாசிரியர்கள், ஆய்வாளர்களே அதனைத் தீர்மானிக்கவேண்டும். அப்படிப்பட்ட இப்புத்தகத்தைப் பேணிப் பாதுகாக்குமாறு என் அன்பான சகோதர, சகோதரிகளைக் கேட்டுக்கொள்வதோடு, இதற்கு நீங்கள் கொடுக்கும் பணம் கட்டிட நிதியில் சேர்வதால் அது ஸதகத்துல் ஜாரியாவாகிறது என்பதைத் தெரியப்படுத்துகின்றேன். அல்லாஹுத்தஆலா அனைவருக்கும் நல்லருள் புரிவானாக. ஆமீன்.

ACCESSION NO: CLASS NO: 907·04

இவ்வண்ணம்,
இஸ்லாமிய ஊழியன்,
**அல்ஹாஜ். எஸ். எல். சம்சுதீன்**
பிரதம இமாம்,
கல்முனைக்குடி ஜும்ஆ பள்ளிவாசல்,
கல்முனை.
*7-8-1993*

ACCESSION NO: CLASS NO: 907·04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
இராஜாங்க அமைச்சுச் செயலாளர்
**அல்ஹாஜ். எஸ். எச். எம். ஜெமீல்** B. A. ( SP.); Dip Ed; M. A.
*அவர்கள் அன்புடன் வழங்கிய*

# பாராட்டுரை

கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் வரலாற்றினை எழுதுவதற்கு ஹாஜி உஸ்மான் சாஹிப் அவர்களும், எஸ். ஆதம்பாவா அதிபர் அவர்களும் முற்பட்டுள்ளமை மிக நல்லதோர் முயற்சி ஆகும்.

இலங்கையில் சுமார் 1600 பள்ளிவாசல்கள் அமைந்திருக்கின்றன. இந்நாட்டின் சகல பிரதேசங்களிலும் அமைந்துள்ள இப்பள்ளிவாசல்கள் முஸ்லிம்களின் மத்திய தலங்களாக விளங்குவதோடு மட்டுமன்றி, எமது பாரம்பரியங்களை வெளிக்கொணர்வதாகவும் உள்ளன. எமது கலாசார, மத, வரலாற்று உண்மைகளை எடுத்துக் கூறுபவைகள் இப்பள்ளிவாசல்களும், இலக்கிய முதுசங்களுமேயாகும். இதனாற்றான் பழம் பெருமை வாய்ந்த பள்ளிவாசல் கட்டடங்கள் புனரமைப்பு என்ற பெயரில் முற்றாகப் புதிதாக்கப்படாது அவற்றின் பழமை பாதுகாக்கப்படலும் மிக அவசியமாகும். அத்துடன் அவற்றின் வரலாறும் எழுத்தில் பதியப்படல் வேண்டும்.

இலங்கையில் 1600 பள்ளிவாசல்கள் இருப்பினும், நூலுருவில் சுமார் 25 க்கும் குறைவானவற்றின் வரலாறுகளே வெளிவந்துள்ளன. இந்நிலை மாறி இந்நாட்டின் சகல பள்ளிவாசல்களின் வரலாறுகளும் நன்கு ஆராயப்பட்டு ஆதாரபூர்வங்களுடனும், துணை ஆவணங்களுடனும் வெளியிடப்படுதல் மிக அவசியமாகும்.

இந்த ரீதியில் கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசலின் வரலாறு நூலுருவில் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரியதே. கிழக்கு மாகாணத்துக்கே தனித்துவமான 'குடிமுறை'யில் காலாதிகாலமாக நிருவகிக்கப்பட்டு வந்த இப்பள்ளிவாசலின் வரலாறு இவ்வாறு நூலுருப்பெறுதல் அதன் வருங்கால வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரியும். அதற்காக இந்நூல் ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல்**
இராஜாங்கச் செயலாளர்

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
இராஜாங்க அமைச்சு,
கொழும்பு.
*28-08-1993.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இஸ்லாத்தின் பல்வேறு துறைகளிலும், நான் பெற்றுள்ள முன்னேற்றத்திற்குக் காலாக - ஆரம்பத்தில் அறிவின் அடிப்படைகளையும், அதன் நுட்பங்களையும் கற்றுத்தந்த - எனது ஆரம்பகால உஸ்தாதுமார்களான, மர்ஹூம்கள் -

அல்ஹாஜ். மௌலவி M. A. சுலைமாலெப்பை (யாசீன் ஆலிம்)

மௌலானா, மௌலவி, மஷ்ஹூர் தங்ஙள்

(சின்னத்தங்ஙள் மௌலானா)

மௌலவி U. L. அஹமதுலெப்பை (சின்னலெப்பை ஆலிம்)

ஆகிய அப்பெருமக்களுக்கு, இந்நூலின் எனது பங்களிப்பினை அர்ப்பணம் செய்கின்றேன்.

— ஹாஜி உஸ்மான் சாஹிப்

இறையடி சேர்ந்த எனதருமைப் பெற்றோர்களான மீரா லெப்பை சிக்கந்தர், அவ்வா உம்மா சிக்கந்தர், சகோதரி ஹாஜியானி உம்முசல்மா ஹபீப் முஹம்மது ஆகியோர்களுக்கு இந்நூலின் எனது பங்களிப்பினை அர்ப்பணம் செய்கின்றேன்.

— எஸ். ஆதம்பாவா (அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

அருளாளன், அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கின்றோம். புகழனைத்தும் அவனுக்கே சொந்தம். அவனுடைய இறுதித் தூதரும், எங்கள் நாயகமுமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் கிளையார் மீதும், நல்லடியார்கள், சாலிஹீன்கள் அனைவர்மீதும் சலவாத்தும் சலாமும் உண்டாவதாக!

முஸ்லிம்களைப் பொறுத்தவரை, ஓர் ஊரில் வாழும் மக்களின் தரத்தை - எழுச்சிகரமான வாழ்வை எடுத்துக்காட்டுவது அவ்வூரின் பிரதான பள்ளிவாசலும், அதன் நிர்வாகமுமேயாகும்.

பள்ளிவாசல் சரியாகச் செயல்படுமானால், அவ்வூர் மக்களுக்கு அதனைப்போன்ற பெரும் பாக்கியம் வேறெதுவும் கிடையாது என்றே சொல்லலாம்.

ஓர் ஊரின் தலைமைப் பள்ளிவாசலின் வரலாற்றைத் தெரிந்து கொண்டால், அஃது அவ்வூரினுடைய சரித்திரத்தையே புரிந்துகொண்டது போலத்தான் என்றால் அது மிகையாகாது!

சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கு - கலை, கலாச்சார மேம்பாட்டுக்கு மஸ்ஜிதுகள் ஆற்றியுள்ள பங்களிப்புகள் அளப்பரியனவாகும்.

கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசலின் வரலாற்றைக் கூறும் எந்த ஒரு ஏடும் இல்லாத நிலையில், முதியவர்களெல்லாம் மறைந்துகொண்டிருக் கிறார்கள்; இன்னும் சிலகாலம் சென்றால் - எஞ்சியுள்ள பெரியவர்களும் போய்விட்டால், அதன் வரலாறு எம் பிற்காலச் சந்ததியினருக்குச் சரி யான முறையில் கிடைக்காது போய்விடும். ஆதலால் அதனை எம்முடைய காலத்திலேயே தொகுத்து வைத்துவிட வேண்டும் என்ற ஓர் அவா எம் உள்ளத்திலே நீண்ட நாட்களாக ஊசலாடிக் கொண்டிருந்தது. அதன் விளைவுதான் இச்சிறிய நூல்.

நம்முடையவும், நமது எதிர்காலச் சந்ததிகளுடையவும் நலன் கருதி இம்முயற்சியை நாம் மேற்கொண்டோம். எமக்கு இதுவரை எட்டிய ஆதாரங்கள், தகவல்களைக் கொண்டு இவ்வாக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பள்ளிவாசல் சம்பந்தமாக மேற்கொண்டும் தகவல்கள் ஏதுமிருப் பின், அறிந்தோர் எமக்கு அறிவிப்பார்களானால், இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் அவற்றினையும் இணைத்துக்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசல்கள் சமூகத்தில் பெற்றுள்ள முக்கியத்துவம் எத்தகையது என்பதை ரசூலே அக்ரம் (ஸல்) அவர்களது வரலாற்றிலே காண முடிகிறது. இதைச் சொல்லும்போது எமக்கு ஓர் அரபுக் கவிதையின் வரிகள் நினைவுக்கு வருகின்றன. அதன் தமிழ் வடிவம் இதோ:

அல்லாஹ்வுடைய பள்ளி தன்னை;
அழகாய் உலகில் நிறுவுவோர்,
எல்லாப் பொழுதும் இறைவன் மறையை;
இனிதே எடுத்து ஓதுவோர்,
சொல்லால் மனத்தால் நள்ளிரவில்;
துயில் கொள்ளாது வணங்குவோர்,
பொல்லாப் பிணிகள் நீங்கி வெற்றிப்;
புகழுருவாய் வாழ்வரே!

இஃது என்ன; ஒரு கவிதையா? ஆம், அஃதொரு அரபுக் கவிதையின் தமிழ் வடிவம்! இற்றைக்கு ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னே அன்றொருநாள் —

தம்முடைய பிறந்த ஊரான, தம் இனத்தாரின் புனித நகரான அந்த மக்கமா நகரிலிருந்து - அந்நகரவாசிகள் தம்மைக் கொலை செய்ய வந்த வேளை, ஒரேயொரு தோழருடன், அங்கிருந்து அற்புதமாய் வெளிப்பட்டு, 'குபா' என்னுமிடம் வந்து சேர்கிறார்கள் வள்ளல் நபி (ஸல்) அவர்கள்.

'குபா' என்பது, 'யத்ரிப்' என்னும் மதீனா நகருக்கு அருகிலுள்ள வளங்கொழிக்கும் எழில்மிகு கிராமம். அவ்வூரின் தலைவர் அம்ர் என்பவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களையும், அவர்தம் தோழர் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களையும் அன்பொழுக வரவேற்றுத் தம் இல்லத்தில் தங்க வைக்கிறார்!

சற்று நேரத்தில் அம்ரின் இல்லம் நாலா பக்கங்களிலும் சுற்றி வளைக்கப்படுகிறது! அந்த வளையம் பகை வளையமா? இல்லை; இல்லை, அன்பு வளையம்.

அண்ணல் அவர்கள் அம்ரின் இல்லத்தில் வந்து தங்கி இருப்பது காட்டுத்தீபோல் ஒரு நொடியில் நாலா திக்குகளிலும் பரவவே, மக்கள் கனவேகத்தில் அவருடைய இல்லத்தை நோக்கிப் பாய்ந்தோடி வந்து கொண்டிருந்தனர். இப்படி வந்து — இறை தூதரின் தரிசனம் காண மக்கள் அவ்வீட்டைச் சுற்றிவளைத்தனர். தூய நபியின் அமுத மொழி கேட்டு அகமகிழ்ந்தனர்.

அங்கு பதினான்கு தினங்கள் தங்கி இருந்தார்கள். அப்பதினான்கு நாட்களுக்குள் அவர்கள் அவ்வூரில் செய்த முதற்பணி, அல்லாஹ்வை அனுதினமும் வணங்கிடுவதற்கான ஒரு பள்ளியினைக் கட்டியெழுப்பியதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியை ஸ்தாபிக்கும் அப்புனித கைங்கரியத்தில் மக்கள் சுறுசுறுப்பாய் ஈடுபட்டனர். அவர்களில் ஓர் அரபிக் கவிஞரும் இருந்தார். அவர் பண்ணிசைத்துக் கொண்டே வேலைகளில் ஈடுபட்டதைக் கவனித்த காருண்ய நபி (ஸல்) அவர்கள், அர்த்தம் பொதிந்த அக்கவிகளைத் தாமும் பாடிக் கொண்டே வேலைகளைச் செய்தார்கள். ஆழமிக்க, அறிவார்ந்த அவ்வரபுக் கவிதையின் தமிழ் வடிவம்தான் மேலே காணப்படுவது.

பின்பு மதீனா நகர் வந்து சேர்கிறார்கள் மாநபி (ஸல்) அவர்கள்; அங்கு மக்கள் ஆதரவு மலையெனப் பெருகுகிறது! அப்போதும்கூட அங்கு அண்ணலார் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட முதற்பணி பள்ளிவாசல் ஒன்றினைக் கட்டியெழுப்பியதுதான்! அவ்வேலை மிகவும் கச்சிதமாய் நிறைவேறியது, அதுதான் 'மதீனத்துந்நபவி' பள்ளிவாசல்!

இலங்கையிலே நஞ்சையும், புஞ்சையும் மிகுந்த அம்பாரை மாவட்டத்தின் நடுநாயகமாய் விளங்குவது கல்முனைப் பட்டினம். அதில் நீர் வளம், நிலவளம் இன்னபிற வளங்களைப் பெற்று, அலைபாயும் கடலோரம் தலைநிமிர்ந்து நிற்கும் எழில்மிகு கிராமம் கல்முனைக்குடி.

அக்கால அமைப்பின்படி வடிவிலும், வண்ணத்திலும், அமைப்பிலும், அழகிலும், தோற்றத்திலும், ஏற்றத்திலும், பெருஞ் சிறப்புப் பெற்றிலங்கிய இவ்வூர் ஜும்ஆப் பள்ளிவாசல் - அதன் வரலாற்றிலேயே நாலாவது பாரிய திருத்தப்பணி ஆரம்பிக்கப்பட்டு, கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அதனுடைய 187 வருடப் பழமை வாய்ந்த வரலாற்றினை இந்நூலில் வடித்து உங்கள் கரங்களிலே தவழ விடுவதில் நாம் மட்டற்ற மகிழ்சியடைகின்றோம்.

எழிலார்ந்த இறை இல்லம் இன்பமாய்த் தோன்றுதற்கே இராப் பகலாய் உழைத்திடுவோர் எல்லோர்க்கும் எம் நன்றிகளை நயமுடன் கூறி இவ்வேட்டினைச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்புத் திருப்பணியாய் அறத்திற்கோர் சான்றாய் அழகோடு மலர்ந்து கொண்டிருக்கும் நம் பள்ளியின் திறப்பு விழாவினையும் நாம் அனைவரும் நலமுடன் கண்டு களிக்க நாயனருள் புரிவானாக!

மேலும் மஸ்ஜிதுகளைப்பற்றி அல்லாஹ்வும், ரசூலும் என்ன சொல்லியுள்ளார்கள் என்பதனை, ''மஸ்ஜித் பற்றிய மணிமொழிகள்'' என்ற பகுதி விளக்குகிறது. அதுபோல, முஸ்லிமல்லாத - பிற மத அறிஞர்கள் மஸ்ஜித்கள் பற்றி என்ன கூறியுள்ளனர் என்ற ஒரு சிறு குறிப்பை, ''பள்ளிவாசல்கள் பற்றிப் பிறமத அறிஞர்கள்'' என்ற பகுதி தருகிறது.

நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? எப்படி வந்தோம்? எமது இனம் எது? என்பன போன்ற வினாக்களுக்கு விரிவான விடை தந்து, மட்டக்களப்பின் (அம்பாரை - மட்டக்களப்பு மாவட்டங்கள்) பூர்வீக குடிகள் முஸ்லிம்கள்; அவர்களுடைய மூதாதையர்கள் இப் பிரதேசத்தை ஆண்டிருக்கிறார்கள் — நாம் ஆண்ட பரம்பரையினர்! என்பதை ஆணித்தரமாக — ஆதாரங்களோடு அறைகிறது, ''கிழக்கிலே ஒரு பரம்பரை'' என்னும் அத்தியாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் கையெழுத்துப் பிரதியினைப் பார்வையிட்டு, நல் ஆலோசனைகள் நல்கியதோடு பாராட்டுரையும் வழங்கிய, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சின் செயலாளர், சகோதரர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல் B. A. (S P.) ; Dip Ed ; M. A. அவர்களுக்கும், அணிந்துரை வழங்கி ஆக்கமும், ஊக்கமும் தந்த அன்புச் சோதரர் இப்பள்ளிவாசலின் பிரதம இமாமும், கதீபுமாகிய அல்ஹாஜ் மௌலவி எஸ். எல். ஷம்சுதீன் (பாரி) அவர்களுக்கும், இதனை அச்சிட்டுப் புத்தக உருவில் கொண்டுவரப் பணவுதவி புரிந்து – வாரி வழங்கிய வள்ளல்கள் அனைவருக்கும், அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த குட்வின் ஓட்டோ அச்சகத்தாருக்கும், மற்றும் இம்முயற்சியில் எல்லாத்துறைகளிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைத்து சகோதரர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாஅல்லாஹ்! எங்களுடைய இந்த முயற்சியை நீ, அங்கீகரித்துக் கொள்வாயாக! இவ்வூருக்கும், இவ்வூரில் வாழ்கின்ற மக்களுக்கும் உன்னுடைய மேலான பாக்கியங்களை வழங்குவாயாக! எங்களுடைய கனிவர்க்கங்களிலும், கால்நடைகளிலும், விவசாயத்திலும், வியாபாரத்திலும் மற்றுமுண்டான விளை பொருட்களிலும் ''பரக்கத்'' என்னும் விருத்தியை நல்கிடுவாயாக! இவ்வூர் மக்களின் வாழ்க்கையை அமைதியும், சாந்தியும் நிறைந்ததாக ஆக்கிவைப்பாயாக. ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

— ஹாஜி உஸ்மான் சாஹிப்
— எஸ். ஆதம்பாவா (அதிபர்)

கல்முனை.
07-08-1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


★ கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் வரலாறு

★ மஸ்ஜித் பற்றிய மணிமொழிகள்

★ பள்ளிவாசல்கள் பற்றிப் பிறமத அறிஞர்கள்

★ கிழக்கிலே ஒரு பரம்பரை

★ குறிப்புகளும் படங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனைக்குடி
# ஜும்ஆப் பள்ளிவாசல் வரலாறு

கிழக்கே ஆர்ப்பரித்து நிற்கும் வங்கக்கடல், மேற்கே பரந்து விரிந்த வயல்வெளி, வடக்கே வர்த்தக – வாணிபத்துக்குப் பேர்போன கல்முனை நகர், தெற்கே செழுமைமிகு சாய்ந்தமருதூர்க் கிராமம். இவற்றினிடையே இயற்கை எழிலும், இனியவளமும் இரண்டறக் கலந்து, இனிதே காட்சி தருகின்றது, ''கல்முனைக்குடி'' என்னும் கவினுறு கிராமம்.

இவ்வூரின் கல்வி, கலாச்சாரம், ஆத்மீகம், நிர்வாகம் மற்றும் இன்னோரன்ன சமூக நலச் செயற்பாடுகள் அனைத்துக்கும் மத்திய நிலையமாகத் திகழ்வது இங்குள்ள ஜும்ஆப் பள்ளிவாசல் என்றால் அது மிகையாகாது.

இற்றைக்கு 187 வருடங்களுக்கு முன் 1806ம் ஆண்டு வைகாசித் திங்கள் ஏழாம் நாள் எமது மூதாதையர் ஒன்றுகூடி ஒரு சிறு பள்ளி வாசலை அமைத்தார்கள்; அதன் கூரை வைக்கோலினால் வேயப்பட்டது.

அன்று முதல் இன்றுவரை வளர்ச்சி பெற்றுவரும் அப் பள்ளி வாசலினுடைய வரலாற்றினை நான்கு காலப் பகுதிகளாக வகுக்கலாம்.

1. மரைக்காயர் காலப்பகுதி
2. நம்பிக்கையாளர் காலப்பகுதி
3. வட, தென் பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டு, ஒரே தலைவரின் கீழ் நிர்வாகம் நடந்த காலப்பகுதி
4. குடி முறைகள் மூலம் மீண்டும் நிர்வாகம் நடந்த காலப்பகுதி

இவ்வூரின் அணிகலனாய் விளங்கும் அல்லாஹ்வின் ஆலயத்தினுடைய அறவினை ததும்பிய வரலாற்றின் நான்கு காலக் கட்டங்களையும் ஒவ்வொன்றாய் எடுத்து நோக்கும்போது —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மரைக்காயமார் காலப்பகுதி

இம்மஸ்ஜிதை மையமாக வைத்து, கல்முனைக்குடிக் கிராமத்தை வட, தென் பகுதியென இரு பிரிவுகளாகக் கொண்டு, நிர்வாகத்தைச் சிறப்புற நடத்தினர் எமது முன்னோர்.

ஒவ்வொரு பிரிவிலும், அப்பகுதிவாழ் மக்களின் தாய்வழிப் பரம்பரை (குடிவழி) மூலம் - செல்வம், செல்வாக்குள்ளவர்களை - அவ்வழித் தோன்றல்களின் தலைவர்களாக - பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து, மஸ்ஜித் நிர்வாகக் குழுவுக்கு நியமித்தனர்.

இவ்வூரில் மொத்தமுள்ள 16 குடிகளிலும் 16 தலைவர்கள், இரு பகுதிகளுக்குமாகச் சேர்த்து ஆக மொத்தம் 32 நபர்கள் மஸ்ஜித் நிர்வாகத்தில் பங்குகொண்டனர். இவர்களை, ''மரைக்காயர்'' என்ற கௌரவ வார்த்தையைக் கொண்டு மக்கள் அழைக்கலாயினர்.

இம் மரைக்காயர் சபைகள், மஸ்ஜிதை மையமாக வைத்து வட, தென் பகுதி என்ற தோரணையில் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே நிர்வாகம், வரவு செலவுக் கணக்குகள் போன்றனவற்றை அமைத்துக் கொண்டன.

ஒவ்வொரு பகுதியின் நிர்வாகத்திற்கும் தலைவராக பெரிய மரைக்காயர் இருப்பார். இவரைக் ''காதியார்'' என்றும் அழைப்பதுண்டு. இப்பெரிய மரைக்காயர், அவரின் எல்லைக்குட்பட்ட சகல கருமங்கட்கும் பொறுப்புவாய்ந்தவராகவும், கட்டளை பிறப்பிக்கக்கூடியவராகவும் இருந்து வந்தார்.

இந்த வரிசையில் மரைக்காயர் மார்களாக, பின்குறிப்பிடப்படுபவர்களும், எங்களால் தகவல் சேகரித்துக்கொள்ள முடியாதுபோன, எம் முன்னோர் பலரும், இப்பள்ளிவாசலை மிகச் சீரும் சிறப்புமாகப் பரிபாலித்து வந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 01 | க. போ. ஆதம்லெப்பைப் போடி | மரைக்காயர் |
| 02 | மு. முஹம்மது தம்பி லெப்பை | ,, |
| 03 | மு. முஹம்மது இஸ்மாயீல் | ,, |
| 04 | ஆ. பே. அலியார்ப்போடி | ,, |
| 05 | மு. சேஹு இஸ்மாயில் போடி | ,, |
| 06 | மு. வா. கோசு முஹம்மது | ,, |
| 07 | ஈ. லெ. கோசு முஹம்மது | ,, |
| 08 | மு. போ. முஹம்மது காசிம் | ,, |
| 09 | வீ. பி. கே. காசிம்பாவாப் போடி | ,, |
| 10 | மு. மீராலெப்பைப் போடி | ,, |
| 11 | மு. கா. சீனிமுஹம்மது (பொ. த.) | ,, |
| 12 | சா. முஹம்மது இப்றாஹீம் | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 கோ. மு. அஹமது லெப்பை மரைக்காயர்
14 மு. முஹம்மதுக்கனி வைத்தியர் ,,
15 ஆ. வெள்ளைக்குட்டி (மீராலெப்பை) ,,
16 சீ. லெ. அப்துல் ஹமீது ,,
17 சி. லெ. உதுமாலெப்பை போடி ,,
18 இ. மிஸ்கீன் பாவா ,,
19 அ. அலியார் ,,
20 எம். எச். எம். ஹனீபா (வ. வி.) ,,
21 ஆ. போ. சாஹுல் ஹமீது ,,
22 எம். எஸ். ஹமீது ,,
23 ஏ. எல். எம். ஷரீபு ,,

## நிர்வாகம் செலுத்திவந்த குடிகள்

இப்பகுதிவாழ் மக்கள் வந்தேறுகுடிகளல்ல; இம்மண்ணின் பூர்வீகக் குடிகளாவர்! இஸ்லாம் உதயமான பின்னர், வேற்று நாடுகளிலிருந்து விரல்விட்டெண்ணக்கூடிய ஒரு சில முஸ்லிம்கள், இங்குவந்து குடியேறி இருக்கலாம். ஆனால் எம்மையெல்லாம் ஈன்றெடுத்த தாய்க்குலமோ திந்தமிழின் புத்திரிகளேயாவர். அதுபோல, ஆண்களிலும் அதிகமானோர் இஸ்லாத்தின் இனிய நாதத்தால் கவரப்பட்டு, முஸ்லிமான - இப்பிரதேசத்தின் பூர்வீக மறத்தமிழர்களேயாகும். ஆதலால்தான் தமிழ் மக்களிடத்தில் பண்டு தொட்டுப் பழக்கத்தில் இருந்து வந்த குடிவழிமுறை, இன்று வரை முஸ்லிம்களிடமும் காணப்படுகின்றது.

ஒரே குடியைச் சார்ந்த தமிழர்களுமுண்டு, முஸ்லிம்களுமுண்டு. அக்குடிவழி முறையின்படி இவ்விரு பிரிவாரும் இரத்த பந்தத்தையுடையோராவர்!

மேலும் இப்பிரதேசம் வாழ் இஸ்லாமியர்கள், இம்மண்ணின் சொந்தக்காரர்கள்; அவர்களின் மூதாதையர்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக (இஸ்லாம் தோன்றுவதற்கு முன்) இப்பெருமைமிகு பூமியிலே பிறந்து - வளர்ந்து - வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள் என்பதற்கு இக்குடிவழி முறையே தக்க சான்றாய்த் திகழ்கிறது.

01 மரைக்காண்ட குடி
02 வெள்ளரசங் குடி
03 உத்துப்பிள்ளை குடி
04 கொசுக் கட்ட குடி
05 இராசாம்பிள்ளை குடி
06 ஆலிம் குடி
07 லெப்பை குடி
08 பொன்னாச்சி குடி
09 பணிக்கனா குடி
10 படையாண்ட குடி
11 காம்பறாச்சி குடி (அல்லது காமராஜ் குடி)
12 ஓடாவி குடி
13 நெய்னா ஓடாவி குடி
14 சங்கரப் பத்தான் குடி
15 மாந்தறா குடி
16 யாஹுவக் குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் மூன்று அல்லது நான்கு குடிகள் மட்டும், பூர்வீக மக்களின் பாரம்பரியங்களையொட்டி, முஸ்லிம் சாயலில் பின்னர் உருவானவை, மற்றப்படி அனைத்தும் ஆதிகாலத் தமிழ் மக்களின் குடிவழிமுறைகளாகும். இப்பகுதிவாழ் முஸ்லிம்கள், இப்பிரதேசத்தின் பரம்பரையுரித்துடைய சொந்தக்காரர்கள் என்பதற்கு, அவை தக்க சான்றுகளாய்த் திகழ்ந்துகொண்டிருக்கின்றன.

மேலும் பல தமிழ்க் குடிவழி வந்தோர்களான முஸ்லிம்கள் அயலிலுள்ள - முஸ்லிம் கிராமங்களில் வாழ்கின்றனர்.

| | | |
|---|---|---|
| வடக்கனா குடி | ஆலம் குடி | சம்மானட்டி குடி |
| மூத்த நாச்சி குடி | உலகிப்போடி குடி | ஆராய்ச்சி குடி |
| அம்மநாச்சி குடி | பட்டாணி குடி | வட்டுநாச்சி குடி |
| சங்கதி குடி | கஞ்சனா குடி | மாமனாப் போடி குடி |

அவற்றின் அடிப்படையிலே தெரிவு செய்யப்பட்ட மரைக்காயமார்களும், அவர்களது குடியினைச் சார்ந்த மக்களும் ஒன்று கூடி 1859ம் ஆண்டு ஆவணி மாதம் 13ம் திகதி பள்ளிவாசலில் புனருத்தாரணம் செய்து முடித்தார்கள். கல்லினால் அத்திவாரமிட்டு, சல்லிஓடும் வேயப்பட்டு கம்பீரமாகக் காட்சி தந்தது இப்பள்ளிவாயல்.

## பின்னர் ஒரு திருத்தம்

காலம் என்றும் ஒன்றுபோல் இருப்பதில்லை; அது சுழன்றுகொண்டேயிருக்கிறது; ஆண்டுகள் மறைந்துகொண்டேயிருந்தன. கல்முனைக்குடி வாழ் மக்களின் சனச் செறிவு, கல்வி, பொருளாதாரம் போன்றவை காலத்திற்குக் காலம் வளர்ச்சியடையவே, பள்ளிவாசலையும் சற்றுப் பெரிதாக அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஆதலால் மீண்டும் புனருத்தாரண வேலைகள் தொடங்கப்பட்டன. பள்ளிவாயல் விஸ்தரிக்கப்பட்டது. சகல வேலைகளும் 1933ம் ஆண்டு பங்குனி மாதம் 11ம் திகதி பூர்த்தியாகி எழில்மிகு பள்ளிவாசல் ஒன்று காட்சியளித்தது.

அதன் நிர்மான வேலையை, மர்ஹூம் அஹமது லெப்பை ஹாஜியார் நெய்னா முஹம்மது ஹாஜியார் (ராசா ஓடாவியார்) அவர்கள் பொறுப்பேற்று, தானே வரைபடம் கீறித் தனது மேற்பார்வையிலேயே சகல வேலைகளையும் கச்சிதமாகச் செய்து முடித்தார். அவருடைய அந்தப் பங்களிப்பை - தியாகச் செயலை, இன்றும் கூட இப்பகுதி மக்கள் புகழ்ந்து பேசுவதைக் கேட்க முடிகிறது.

ஜனாப். ராசா ஓடாவியார் அவர்கள் இக்கைங்கரியத்தைச் செய்து முடித்தபோது அங்கே தன்னுடைய பெயரையும், ஆண்டு திகதிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிந்துவைக்கத் தவறவில்லை. பள்ளிவாயலின் உட்பள்ளி ஓரமாக வுள்ள கதவு நிலையின் மேல் (கிழக்கேயிருந்து நோக்கும்போது முதலா வது கதவு நிலை; மேற்கேயிருந்து பார்த்தால் 6 வது கதவு நிலை) ஓர் அலங்கிர்தமான பூ வேலைப்பாடு காணப்படுகிறது. தூரத்தே நின்று பார்க்கும்போதுதான் அது பூவேலைப்பாடே தவிர, நெருங்கிச் சென்று உற்று நோக்கினால், அங்கே காணப்படுவது அலங்கார அரபு எழுத்துக் களேயாகும். அவைகள்தாம் ராசா ஓடாவியார் அவர்களின் சம்பூரண மான பெயரும், நிர்மாண வேலை பூர்த்தியடைந்த ஆண்டு, திகதிகள் என் பன. இதனை நெய்னா முஹமது என்றும் வாசிக்கலாம்; யாமுஹம்மது என்றும் வாசிக்கலாம். அந்தவகையில் நுட்பமாக அது அமைந்துள்ளது.

அத்தோடு தான் வபாத்தான பின்னர், தன் பெயர் பொறிக்கப் பட்டுள்ள வடபகுதிப் பக்கத்துக் கதவுக்கு நேரே - விறாந்தையின் வெளிப் புறச் சுவருக்கு அப்பால் - சில அடிகள் தள்ளி - பள்ளிவாயல் வளவில், தன்னை நல்லடக்கம் செய்ய வேண்டுமென, ''வொஸியத்'' செய்து சென்றதாகவும், செவிவழி வந்த செய்தியொன்று கூறுகிறது. எது எப் படி இருந்தபோதிலும், அதேவிதமாக அன்னாருடைய ''கப்ர்'' அமைந் துள்ளதை இன்றும் காண முடிகின்றது.

அவைபோல இம்மஸ்ஜித் ஆரம்பத்தில் - அமைக்கப்பட்ட நாள், பிற்காலங்களில் திருத்தப்பட்ட தினங்கள், ஆண்டுகள் யாவும் அரபு மொழி யில் மரக்கட்டியின் மீது பொழிந்து வைத்துள்ளார். அவை மஸ்ஜிதின் உள்ளே பெரிய கதவால் நுழையும்போது முதலில் தென்படும் - வடக்குத் தெற்காய் நேராக அமைந்துள்ள கலையம்சம் நிறைந்த இரு தூண்களின் மேல் போடப்பட்டுள்ள வளையில் காணப்படுகின்றன.

காலத்தால் அழியாத கலையழகு மிளிரும், அந்தச் சரித்திரச் சான்றுகளைத் தற்போது நவீனமயப் படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் பள்ளியிலிருந்து அப்புறப்படுத்திவிடாது எவ்வகையிலேனும் இடம் பெறச் செய்ய வேண்டும் என - தற்போதையக் கட்டிடக் குழுவினரை மிகவும் வினயமாக வேண்டிக்கொள்கிறோம்.

அக்காலத்தில் வடபகுதிக்கு, பெரிய மரைக்காயராக மு. த. போ. ம. கோசு மீராலெவ்வைப் போடி மரைக்காயர் அவர்களும், தென் பகுதிக்கு பெரிய மரைக்காயராக, கோசு முஹம்மது மரைக்காயர் அஹமது லெப்பை மரைக்காயரும் கடமை புரிந்தனரென்று அறிகிறோம். பள்ளி வாயல் ஏறத்தாழ 2000 பேர்வரை தொழக்கூடிய விஸ்தீரணத்தில் அமைந் தது. அக்காலத்தில் மட்டக்களப்புக்குத் தென்பகுதியில், இப்பள்ளிவாசலே மிக எழிலும், கண்களைக் கவரும் கலையம்சமும் கொண்டதாக விளங்கி யது. இதனது விஸ்தீரணம் 8100 சதுர அடிகளாகும். இப்பள்ளிவாசல் அமைப்பதற்குரிய செலவுகள் யாவும் இவ்வூர் மக்களிடத்தில் மட்டுமிருந்தே பெறப்பட்டமை, பெருமையோடு குறிப்பிடத்தக்க - ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகச் சிறப்பு

அன்றைய மரைக்காயர் சபையினர் பள்ளிவாசலை மட்டும் கட்டி வைத்துவிட்டுப் போகவில்லை; தனவந்தர்கள் - போடிமார்களிடமிருந்து நெற்காணிகள், கடைகள், வளவுகள் போன்றனவற்றையும் பெற்று, பள்ளிவாசலின் பெயரில் சேகரித்து வைத்துள்ளனர். அவற்றின் பெறுமதிகளோ இன்று பலகோடி ரூபாய்களாகும்.

அவற்றின் வருமானங்களைக் கொண்டு பள்ளிவாசலின் பரிபாலனச் செலவுகள் போக மீதமாயிருக்கும் பணத்தையும் அவ்வப்போது பொது மக்களால் வழங்கப்படுகின்ற அன்பளிப்புகளையும் சேர்த்து, ஆண்டு தோறும் நூற்றுக்கணக்கான மாடுகளையும், அவணக்கணக்கான அரிசியையும் கொண்டு - சோறு கறி சமைத்து இக்கிராமத்திலுள்ள சகல மக்களுக்கும் ''கந்தூரி - அன்னதானம்'' கொடுக்கும் வழக்கம் அப்போது இருந்தது. இக்கந்தூரி வைபவங்களில் அயல் கிராமத்து மக்களும் ஆர்வத்துடன் கலந்துகொள்வார்கள்.

இப்படியான வைபவங்களை நடத்தவேண்டுமென்று - ஆதனங்களை நன்கொடை வழங்கியவர்கள் - அவ்வாதன உறுதிகளில் நிபந்தனையாகக் குறிப்பிட்டு வரைந்து வைத்துள்ளனர். மேலும் அக்காலத்தில் 1975 க்கு முன் பள்ளிவாசலில் கடமையாற்றிய லெப்பை (இமாம்), முஅத்தின் போன்றோர்க்கு ஊதியமாக வருடாவருடம் காணிகளையே பயிரிடுவதற்குக் கொடுக்கப்பட்டு வந்துள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் வட, தென் பகுதி மக்கள் ஒருவருக்கொருவர் போட்டியாக ''வாணங்கள் - பட்டாசுகள்'' கட்டி பள்ளிவாசலின் மைதானத்தில் கொழுத்தி மகிழ்வர். முஸ்லிமல்லாத தமிழ் சகோதரர்களும் வந்து அன்னதானம் பெற்று அகமகிழ்வதுமுண்டு.

அப்படியான ஒரு கந்தூரி வைபவத்தை எமது சிறு பராயத்தில் ஒரு முறை நேரில் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அதுவே, இறுதிக் கந்தூரி - வான வேடிக்கையாகவும் அமைந்துவிட்டது, அவ்வாண்டு 1952 நவம்பர் மாதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி வழங்கியவர்களின் பெயர், குடிவழி, ஏக்கர் விபரம்:**

01 ஏ. மு. ஆதம்பாவாப் போடி — பொன்னாச்சிகுடி
குளிமடுக்காணி 2 ஏக்கர் கல்முனைக் கண்டம்

02 மு. த. போ. ம. கோசுமீராலெப்பைப் போடி
மரைக்கார் — வெள்ளரசங்குடி
வெள்ளவேட்டிக்காரர் முத்தெட்டு 3 ஏக்கர் கல்முனைக் கண்டம்

03 அ. ஆதம்கண்டுப் போடி — உத்துப்பிள்ளை குடி
பெரியகாணி 3 ஏக்கர் கல்முனைக் கண்டம்

04 மு. போ. இஸ்மாலெப்பை — ஆலிம் குடி
கரச்ச வயல் 4 ஏக்கர் கல்முனைக் கண்டம்

05 எ. ஐ. எச். முஹம்மது ஹாஜியார் — வெள்ளரசங்குடி
ஹபீப் முஹம்மது ஹாஜியார் கீத்து 3 ஏக்கர் கல்முனைக் கண்டம்

06 எம். அஹமது லெப்பை ஹாஜியார் — ஆலிம் குடி
வாய்க்காலடிக் கீத்து 2 ஏக்கர் இறைவெளிக் கண்டம்

07 அ. லெ. ஆதம்பாவாப் போடி — வெள்ளரசங் குடி
ஏழுமரைக்காற் தரை 2 ஏக்கர் இறைவெளிக் கண்டம்

08 அ. லெ. போ. அலியார் — இலவ குடி
பெரியபள்ள வயல் 2 ஏக்கர் இறைவெளிக் கண்டம்

09 உ. க. போ. செமிலத்தும்மா — காமராசர் குடி
வெளிப்பற்று மேட்டுவயல் 1 ஏக்கர் இறைவெளிக் கண்டம்

10 உ. க. போ. அஹமது லெப்பை — காமராசர் குடி
போடியா வெளி 1 ஏக்கர் இறைவெளிக் கண்டம்

11 மு. இ. முஹமதலியார் — மாந்தறா குடி
பொன்னாங்கேணி 2 ஏக்கர் இறைவெளிக் கண்டம்

12 எம். மீரா மொஹிதீன் ஹாஜியார் — இலவ குடி
மி. த. ஹாஜியார் கீத்து 1 ஏக்கர் இறைவெளிக் கண்டம்

13 எம். நெய்னா முஹம்மது ஹாஜியார் — கச்சனா குடி
சொக்கனாப் போடியார்கீத்து 2 ஏக்கர் மேற்கண்டம்

14 சுலைஹா பீவீ ஹாஜியானி — மாந்தறா குடி
சொக்கனாப் போடியார் கீத்து 2 ஏக்கர் மேற்கண்டம்

15 அ. லெ. ஆதம்லெப்பை — இலவ குடி
மோதீன் கீத்து குடாக்கரை 2 ஏக்கர் கிழல் கண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 மு. கா. முஹிதீன்பாவாப் போடி — ஆலிம் குடி
மாங்குட்டி வெட்டுவான் 4 ஏக்கர் பண்டித்தீவுக் கண்டம்

17 ஐ. எல். உதுமாலெப்பைப் போடி — இலவ குடி
சல்வெட்டியன் 5 ஏக்கர் மேற்கண்டம்

18 அ. லெ. ஆதம்பாவாப் போடி — வெள்ளரசங் குடி
சேகப்பற்று 5 ஏக்கர் சேகப்பற்றுக் கண்டம் இரு போகம்

19 அ. சீனிமுஹம்மது — இலவ குடி
கொடுவாமடுக் கீத்து 5 ஏக்கர் அம்மையண்ட வெளி இரு போகம்

20 யூ. எஸ். முஹம்மது ஹாஜியார் — ஓடாவி குடி
மாக்கார் கீத்து 2 ஏக்கர் மேற்கண்டம் இரு போகம்

21 அ. லெ. போ. இஸ்மாலெப்பைப் போடி — வெள்ளரசங் குடி
தோப்பு வெட்டுவான் 8 ஏக்கர் மேற்கண்டம் இரு போகம்

22 மு. வா. அலியார்ப் போடி — பொன்னாச்சி குடி
குளத்துவயல் 8 ஏக்கர் மேற்கண்டம் இரு போகம்

23 சி. போ. உதுமாலெப்பை போடி — உத்துப்பிள்ளை குடி
வேப்படிக் கீத்து 2 ஏக்கர் மானாகம் கண்டம்

24 எம். முஹிதீன் பாவா — வெள்ளரசங் குடி
கோழி கொத்தியர் கீத்து 2 ஏக்கர் ஆமைவட்டை
பள்ளிவாசல் பராமரிப்பில் இல்லை

25 ஏ. ஆதம்பாவா — வெள்ளரசங் குடி
இறக்காமத்து வட்டை 5 ஏக்கர் இறக்காமம்
பள்ளிவாசல் பராமரிப்பில் இல்லை

நெற் செய்கைக் காணிகளின் மொத்தம் 78 ஏக்கர்களாகும். இவை தவிர கடைகளும், வளவுகளும் உள்ளன. அவற்றின் விபரம் வருமாறு;

தென்பகுதி: கடைவளவு உறுதி இல $\frac{1891}{1904}$ இது, இலவ குடியைச் சேர்ந்த மீராப்பிள்ளை அஸனார் லெப்பை மரைக்காயர் அவர்கள் வழங்கியது.

4ம் குறிச்சி: பக்கீர் வளவு
மு. கா. லெ. முஹம்மது காசிம் லெப்பை - ஆயிஷா உம்மா (இலவகுடி வழங்கியது)

4ம் குறிச்சி: ப. நோ. கூ. ச. வளவு
91/92 காலப்பகுதியில் பள்ளிவாசலுக்கு கிரயமாக வாங்கப் பட்டது.

வடபகுதி: பிரதான வீதி, பள்ளி வீதி ஆகியவற்றில் அமைந்திருக்கும் 11 அறைக் கடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசலின் மேற்கு: பிரதான வீதி பேமிட் பூமி.

குளக்கரை *File No: AM / KP / A2 – File No: AM / L / 8 / KP / 62*

(இதன் வரைபடத்தை புத்தக இறுதியில் காண்க)

குளத்துவயல் உறுதி இல: $\frac{1634}{15\text{-}11\text{-}31}$

எஸ். எம். ஏ. அப்துல் ஹமீது ஆலிம் (மரைக்காயர்) அவர்களிடமிருந்து 26-03-1976ல் அப்போதையத் தலைவர் எம். ஐ. எச். முஹம்மது அவர்களும், ஏனைய நம்பிக்கையாளர்களும் பெற்றுக்கொண்ட உறுதிகளின் இலக்கங்கள்:

$\frac{25525}{1\text{-}1\text{-}62}$, $\frac{2558}{9\text{-}10\text{-}30}$, $\frac{14114}{11\text{-}2\text{-}50}$, $\frac{17201}{1953}$, 915, 4201,

845, 5232, 261, 1841, 215, 6150, 9554, 6149.

இவ்வளவு ஆதனங்களையும் தன்னுடையதாகக் கொண்டு, தினமும், பல்வேறு காரியங்களுக்காக, ஊர்மக்கள் வழங்கும் பெருவாரியான வருமானத்தையும் பெற்று வளமுடன் திகழ்வதுதான் கல்முனைக்குடி ஜும்ஆ பள்ளிவாசல்!

ஒரு குடியிலுள்ள மரைக்காயர் ஒருவர் மரணமடைந்துவிட்டால் அக்குடிவாழ் மக்கள் தங்களுக்குள் தகுதியான ஒருவரைத் தெரிவுசெய்து அவரைத் தங்களது மரைக்காயராக நியமிக்கும்படி - மரைக்கார் சபைக்கு விண்ணப்பிப்பர். அதனை சபை நன்கு பரிசீலனை செய்து அவரை ஓர் அங்கத்தவராக ஏற்றுக்கொள்ளும்.

இம்முறையானது ஏறக்குறைய 150 வருடங்களாக இக்கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அத்தோடு கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பள்ளிவாசல்களிலும் இம்முறையே நடைமுறையில் இருந்து வந்திருக்கின்றது.

போத்துக்கேயர் காலந்தொட்டு ஒல்லாந்தர், பிரிட்டிஷார் காலப் பகுதிகள் கழிந்து, சுதந்திர இலங்கையின் பாராளுமன்ற ஆட்சி முறை அமுலுக்கு வரும் வரை, இம்முறையே நடைமுறைப்படுத்தப்பட்டது. 1956ம் ஆண்டுடன் இந்த மரைக்காயர் காலப் பகுதி முடிவடைந்தது.

பள்ளிப் பரிபாலனத்திலும், நிர்வாகத்திலும் இவர்களது காலம் செழுமையும், சிறப்புமிக்கதுமாகும் என்பதை இங்கு குறிப்பிடாதிருக்க முடியாது. நாம் விசாரித்தறிந்த வகையில், அம்மரைக்காயர்மார்கள் தன்மான உணர்வு, பக்க சார்பின்மை, சுயபுத்தி, நீதி, நேர்மை மிக்கவர்களாகத் திகழ்ந்துள்ளனர். பொதுச் சொத்துக்கள் விடயத்தில், பெரும் பேணுதலுடன் நடந்து கொண்டார்கள்.

மரைக்காயர் சபைக் கூட்டத்தில், பள்ளியினுடைய வருவாய்கள் கணக்கிடப்பட்டு - சரிபார்த்த பின்னர், இருப்புப் பணத்தை, ''உமல்'' என்னும் - புல்லினால் பின்னப்பட்ட - பையில் போட்டுப் பொட்டணமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி, நிதிப்பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டால், பின்னரொரு கட்டத்தில் அப்பணம் தேவைப்பட்டு, அதனைக் கொண்டுவருமாறு சபை பணிக்கும்போது, அதே பொட்டணம், அதே முடிச்சு, அதே பணம் எவ்வித மாற்றமுமின்றி வந்திருக்குமாம். இதற்கிடையில் நாட்கள் பல நகர்ந்து, ஆண்டுகள் சில கடந்துவிட்டிருக்கும்! அப்படியென்றால் அவர்களுடைய "தக்வா - இறைபக்தி", "இக்லாஸ் - மனத்தூய்மை" என்பன எப்படிப்பட்டதாயிருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

தேவையேற்படும்போது பொதுப் பணத்தில் எடுத்துச் செலவு செய்துவிட்டு, பின்னர் வசதி வரும்போது போட்டுச் சரிசெய்யும் நவீன கால நல்ல மனிதர்கள் வாழும் இக்காலத்தில் நாமெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு விடயமிது.

ஊர்மக்கள் அவர்களுக்கு பணிந்தனர்! அவர்களது சொற்களைத் தலைமேற்றாங்கி நடந்தனர்!! அரசியல் அதிகாரிகள் கூட அவர்களைக் கண்டு அஞ்சினர்!!! ஊர்விவகாரங்கள், பிரச்சினைகள் யாவற்றையும் - விசாரித்துத் தீர்த்துவைக்கும் தகுதிபடைத்தவர்களாக அவர்கள் விளங்கியதுடன், தண்டனை கொடுக்கும் திறன்பெற்றவர்களாகவும் திகழ்ந்தனர்.

நாம் அறிந்த வகையில் பொதுவாகச் சொல்லப்போனால் - "எவர்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசித்து தொழுகையையும் கடைப்பிடித்து, ஸகாத்தும் கொடுத்து வருவதுடன், அல்லாஹ்வையன்றி மற்றெவருக்கும் பயப்படாமல் இருக்கிறார்களோ அவர்கள்தாம் அல்லாஹ்வுடைய பள்ளிகளைப் பரிபாலனஞ் செய்யக்கூடியவர்கள், இத்தகையோர் தாம், நேரான வழியில் இருப்பதாக நம்பத்தக்கவர்கள்."

(அல்குர்ஆன் 10: 18)

என்னும் அல்லாஹ்வுடைய கட்டளைக்கு ஏற்புடையவர்களாக இருந்தார்கள் என்று சொல்லலாம்.

## நம்பிக்கையாளர் காலப் பகுதி

1956ம் ஆண்டு மக்கள் ஐக்கிய முன்னணியானது அரசாங்கத்தை அமைத்ததும், "வக்பு மசோதா" பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது; அதற்கேற்ப நம்பிக்கையாளர் சபை நியமனமும் நடைமுறைக்கு வந்தது. அதன்படி வக்பு சபை ஆணையாளரே, பள்ளிவாசல்களது பரிபாலனத்திற்குரிய நம்பிக்கையாளர்களை நியமிக்கும் அதிகாரம் உடையவராக ஆக்கப்பட்டார். இதனடிப்படையில், இலங்கையிலுள்ள சகல பள்ளிவாசல்களும் வக்பு சபைக்குக் கீழ் பதிவு செய்யப்பட்டன. அதன் பிரகாரம் வக்பு சபையினரால் 1964ம் ஆண்டு, இப்பள்ளிவாசலின் வட, தென்பகுதி இரண்டுக்கும் நம்பிக்கையாளர்கள் நியமிக்கப்பட்டனர். இந் நியமனம் சம்பந்தமாக எழுந்த சட்டப்பிரச்சினைகளைத் தொடர்ந்து பின்னர் 1965ல் குடிவழிமுறை தழுவி நியமனம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட பகுதி —

ஜனாப். கே. உமர்லெப்பை
ஜனாப். எம். ஏ. ஆதம்பாவா
ஜனாப். ஏ. சாஹுல் ஹமீது மரிக்கார்
ஜனாப். பி. மீராலெப்பை மரிக்கார்
ஜனாப். ஏ. உஸனார்
ஜனாப். எம். டி. உதுமாலெப்பை
ஜனாப். எஸ். எச். எம். மீராசாஹிபு (மௌலவி S. S. இப்றாஹீம்)
ஜனாப். ஏ. எம். எம். முஸ்தபா - செயலாளர்
ஜனாப். எம். எம். ஹுசைன் (V. H.)
ஜனாப். எஸ். எச். எம். அப்துல் மஜீது
ஜனாப். எஸ். எல். அப்துல் காதர் V. H. J. P. (தலைவர்)
ஜனாப். எம். உதுமாலெப்பை

தென் பகுதி —

ஜனாப். எஸ். உதுமாலெப்பை
ஜனாப். எம். ஆதம்பாவா
ஜனாப். யூ. சின்னத்தம்பி
ஜனாப். யூ. இப்றாலெப்பை
ஜனாப். ஏ. எல். எம். ஹனீபா
ஜனாப். எம். பி. எம். இஸ்மாயில் (தலைவர்)
ஜனாப். பி. எம். மக்பூல் ஆலிம்
ஜனாப். ஏ. எல். தம்பிலெப்பைப் போடியார்
ஜனாப். எஸ். ஏ. எம். எம். அப்துல்காதர் மௌலானா
ஜனாப். எஸ். எம். ஏ. எம். எம். இஸ்மாயீல் ஆலிம்
ஜனாப். ஐ. ஆதம்பாவா
ஜனாப். எம். எம். யூனுஸ் (செயலாளர்)
ஜனாப். யூ. எல். எம். இஸ்மாயீல்

## ஒரே தலைமையில் நிர்வாகம்

1806ம் ஆண்டு முதல் 1975ம் ஆண்டுவரை 169 வருடங்களாக வட, தென் பகுதிகளென இரு பிரிவுகளாகக் கொண்டு, இரு தலைவர்களின் கீழ் நடாத்தப்பட்டு வந்த நிர்வாக முறையும், குடிவழி முறையிலான தேர்வும் ஒழிக்கப்பட்டு 9-6-1975ல் பொதுவான 12 பேர்களைக் கொண்ட நம்பிக்கையாளர் சபை உருவாக்கப்பட்டது. அதன் விபரம் வருமாறு —

1 அல்ஹாஜ். எம். ஐ. எச். முஹம்மது (தலைவர்)
2 ஜனாப். எஸ். ஆதம்பாவா - அதிபர்
3 ஜனாப். எம். எச், எம். ஹுசைன் - ஆசிரியர் (இ. செயலாளர்)
4 அல்ஹாஜ். ஏ. எல். உதுமாலெப்பை - மல்லிகா (பொருளாளர்)
5 ஜனாப். எஸ். எம். எச். எம். அபூபக்கர் (இணைச் செயலாளர்)
6 ஜனாப். ஏ. மீராலெப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 ஜனாப். மௌலவி எஸ். எல். அப்துல்கனி
8 ஜனாப். ஏ. சின்னத்தம்பி - சாஹுல் ஹமீது
9 ஜனாப். எம். ஐ. ஜமாலுத்தீன் (உபதலைவர்)
10 ஜனாப். யூ. எல். எம். ஹனீபா
11 ஜனாப். ஏ. முகைதீன்பாவா (உப தலைவர்)
12 ஜனாப். ஏ. பி. எம். இஸ்மாயீல்

ஆகியோர் அச்சபையில் இடம்பெற்றனர். இவர்கள் நன்மனத்தோடு ஒன்றுகூடி 1976ம் ஆண்டு ஆவணி மாதம் 7ம் திகதி இப்பள்ளி வாசலிலே பெரியதொரு திருத்த வேலையினைச் செய்து முடித்தனர். தற்போதையப் புனருத்தாரணத்திற்காக இப்பள்ளி உடைக்கப்படுவதற்கு முன் 1985ம் ஆண்டில் காட்சி தந்த அழகுமிகு நிலைக்கு ஆக்கியமை அனைவராலும் போற்றத்தக்க ஒன்றாகும்.

பண்டையப் பெருமை வாய்ந்த குடிவழி மரைக்காயர்மார் சபைக்குப் பதிலாகப் புதிய பாணியிலான நம்பிக்கையாளர் சபையினர் நிர்வாகத்துக்கு வந்திட்ட போதிலும், அவர்கள் – பள்ளிவாசலினுடைய பெரும்பாலான விஷயங்களில் - நம்முன்னோர்களின் பாரம்பரிய நடைமுறைகளையே கடைப்பிடித்து வந்தார்களென அறிகிறோம்; அது போற்றுதற் குரியது! புகழுதற்குரியது!!

## மீண்டும் குடிமுறையிலான நிர்வாகம்

இக்கிராமத்திலே வாழுகின்ற மக்களது தொகையினுக்கேற்ப 16 குடிகளுக்குமான நம்பிக்கையாளர் தெரிவு, மீண்டும் 1984ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதற்கேற்ப பல குடிகளுக்கு இரு நம்பிக்கையாளர்களும், சில குடிகளுக்கு ஒரு நம்பிக்கையாளரும் என்ற விகிதத்தில் மொத்தம் 24 நம்பிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

முற்கால மரைக்காயர் சபை தனித்துவம் வாய்ந்த – சுதந்திரமிக்க இக்கிராம மக்களின் மத்திய பீடமாக விளங்கியது ஆனால் இப்போதைய இச்சபையோ, குடிவழி மூலம் நம்பிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், அரசாங்கத்தினுடைய அதிகாரத்தின் கீழ் இயங்கும் வொக்பு சபையின் மேற்பார்வையில் - அவர்களது சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு இயங்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் அமைந்தது. அதன் தலைவராக அல்ஹாஜ் எம். ஐ. எச். முஹம்மது அவர்கள் நியமிக்கப்பட்டார்.

1975ல் இருந்து வந்த முறையை மாற்றித் தற்போதைய - இந்த சபையை உருவாக்கியது, நிர்வாகம் சீராகவும், சிறப்பாகவும் நடந்து, கிராம மக்களை சத்திய சன்மார்க்க நெறியில் வழிநடத்திச்செல்லவேண்டுமென்பதற்கேயாகும்.

இவ்வேற்பாட்டைச் செய்ததில் முன்நாள் முல்லை மாவட்ட அமைச்சரும், அப்பால் வர்த்தக கப்பற்துறை அமைச்சரும், தற்போதைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக வாணிபத்துறை அமைச்சருமான, ஆலி, ஜனாப். ஏ. ஆர். மன்சூர் (சட்டத்தரணி) அவர்களின் பங்களிப்புப் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

## குடிகளுக்குத் தெரிவான நம்பிக்கையாளர்கள்

| | | |
|---|---|---|
| 01 | மரைக்காண்ட குடி | - ஜனாப். எஸ். ஆதம்பாவா (அதிபர்) |
| 02 | வெள்ளரசங் குடி | - ஜனாப் அல்ஹாஜ் எம். ஐ. எச். முஹம்மது,<br>ஜனாப். எம். பி. எம். முஸ்தபா |
| 03 | உத்துப்பிள்ளை குடி | - ஜனாப். எம்.எச்.எம். ஹுசைன் (ஆசிரியர்)<br>ஜனாப். ஐ. எல். சுலைமாலெப்பை |
| 04 | கொசுக்கட்ட குடி | - ஜனாப். அல்ஹாஜ் எம்.எல்.எம்.சம்சுதீன்,<br>ஜனாப். எம், எம். இஸ்மாயீல் (அதிபர்)<br>ஜனாப். யூ. எம். ஹனீபா (ஜே. பி.) |
| 05 | ஆலிம் குடி | - ஜனாப். அல்ஹாஜ் ஐ. எல். எச். முஹம்மது<br>ஜனாப். ஏ. எல். லத்தீபு |
| 06 | லெப்பை குடி | - ஜனாப். எம். எம். காசிம் (ஆசிரியர்)<br>ஜனாப். எம். ஏ. எம். ஸுப்யான் (ஆசிரியர்) |
| 07 | பொன்னாச்சி குடி | - ஜனாப், ஏ. சீனிமுஹம்மது (வ. வி) |
| 08 | பணிக்கனா குடி | - ஜனாப். எஸ். எச். எம். இப்றாஹீம்<br>ஜனாப். எம். ஏ. எம். மக்பூல் |
| 09 | படையாண்ட குடி | - ஜனாப். எஸ். எச். ஏ. ஹமீது (வ. வி.)<br>ஜனாப். எம். ஐ. ஆதம்பாவா |
| 10 | காம்றாச்சி குடி | - ஜனாப். ஏ. எச். எம். ஏ. மஜீத் (S. P. M.) |
| 11 | இராசாம்பிள்ளை குடி | - ஜனாப். எம். பி. எம். ஹுசைன்<br>ஜனாப். எம். பி. ஏ மஜீத் |
| 12 | ஓடாவி குடி | - ஜனாப். யூ. எஸ். முஹம்மது<br>ஜனாப். எம். ஏ. சுலைமா லெப்பை (ஆலிம்) |
| 13 | நெயினா ஓடாவி குடி | - ஜனாப். எம். ரி. ஏ. ஜப்பார் G. S. |
| 14 | மாந்தறா குடி | - ஜனாப். யூ. எல். யூனுஸ் லெப்பை |

இவர்கள் சில காலம் நன்கு பணியாற்றி வந்தார்கள்......

இவ்வூரில் தினமும் ஐங்காலத் தொழுகை நடைபெறும். தைக்காக்களும், மற்றுமொரு ஜும்ஆ மஸ்ஜிதும் உள்ளன. அவையனைத்திற்கும் தாய் மஸ்ஜிதாக - மத்திய பீடமாகத் திகழ்வது பிரஸ்தாப ஜும்ஆ - பெரிய பள்ளிவாசலேயாகும். மேலும் ''மதரஸாக்கள்'' என்னும் குர்ஆன் பாடசாலைகள் (10) பத்தும் இயங்கிவருகின்றன.

ஜமாஅத்தே இஸ்லாமி, ஜம்இ அத்தே அன்ஸார்ருல் சுன்னத்து முஹம்மதியா ஆகிய இயக்கங்களால் நடத்தப்படும் இரு மத்ரஸாக்கள் ஒரு ஜும்ஆப் பள்ளி தவிர ஏனையவை அனைத்துக்கும் பெரிய பள்ளி வாசலால் மானியம் வழங்கப்படுகிறது.

அதிகரித்துவரும் ஆட்தொகையின் அளவிற்கேற்ப, அல்லாஹ்வின் ஆலயத்தினையும் அகண்டு, விரிந்ததாக்கிடவேண்டிய அவசியம் இப்போது உணரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரிய பள்ளிவாசல் ஒன்றினை அமைக்கவேண்டிய - புதுயுக மாற்றத்தின் புனிதமிக்க அந்தப் பொறுப்பு, இந்த நிர்வாக சபையின் தலையில் வீழ்ந்தது. எனவே 22-1-1984ல் நடந்த இந்த நம்பிக்கையாளர் சபையின் இரண்டாவது கூட்டத்தில், மாபெரும் மஸ்ஜிதாக இப்பள்ளி வாசலை விஸ்தரித்துப் புதுப் பொலிவுடன் உருவாக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

அத்தீர்மானத்தை ஜனாப். எஸ். ஆதம்பாவா (அதிபர்) பிரேரிக்க, மர்ஹூம் எம். ஏ. எம். ஸுப்யான் (ஆசிரியர்) ஆமோதிக்க சபை ஏகமன தாக ஏற்றுக்கொண்டது.

## வெட்டுக்குளமமைந்த விநோதம்

பள்ளியினுடைய ஒவ்வொரு திருத்தத்தின்போதும், மணல் தேவைப் பட்ட போதெல்லாம் பள்ளி வளவின் கிழக்குப் புறமாக மடு வெட்டி மண் எடுத்து வந்தார்கள். அது நாளா வட்டத்தில் ஒரு சிறிய குளம் போல் காட்சியளிக்கத் தொடங்கியது.

125 அடி நீளம், 75 அடி அகலம், 15 அடி ஆழம் கொண்டதாக அமைந்த அப்பள்ளத்தில், மஸ்ஜிதின், 'ஹவுளி'லிருந்து வரும் கழிவு நீர் சாக்கடை வழியாக வந்து விழுந்துகொண்டிருந்தது; அத்துடன் மழை பொழியும் போதெல்லாம், அந்நீரும் இதில் தேங்கிக் குளமாக விளங்கி யது. இதனால், ''வெட்டுக்குள''மென அதை மக்கள் அழைக்கலாயினர்.

இக்குளத்திலே மாரிகாலத்தில் நீர் நிரம்பிப் பள்ளிவாசலுக்கு அண் மையிலுள்ள பிரதான வீதியை அடுத்து அமைந்திருக்கும் ஆதம்போடிக் குளத்திலே சங்கமமாகிக் கொண்டிருந்தது. எம்மூதாதையர்கள், வெட்டுக் குளத்திற்கும், ஆதம்போடிக் குளத்திற்குமிடையிலே வடிகால் அமைத்திருந் தனர். அதனை நாம் இன்றும் காணக்கூடியதாயிருக்கின்றது.

வெள்ளம் பெருக்கெடுக்கும் மாரி காலத்தில் ஆதம்போடிக் குளத்தி லுள்ள பல மீனினங்கள், இந்த வெட்டுக் குளத்தில் வாசம் செய்யத் துவங்கும். அப்போது மீனவர்களும் அவற்றினைப் பிடித்து விற்பனை செய்வர். பெருவெள்ளம் ஏற்படும் காலங்களில் அதிகமான மீன்களை இக்குளத்தில் பிடித்தெடுப்பார்கள். இந்நிலை 155 வருடங்கள் வரை நிலை பெற்றிருந்தது.

ஜனாப். எஸ். எல். அப்துல் காதர் J. P. வடபகுதித் தலைவர்,
ஜனாப். எம். பி. எம். இஸ்மாயீல் (வ. வி.) தென்பகுதித் தலைவர்

ஆகியோரது தலைமையில் அமைந்த நம்பிக்கையாளர் சபையினது ஏகோபித்த முடிவின்படி வெட்டுக் குளத்தை மூடும் வேலை ஆரம்பமாகி யது. அதற்கேற்ப, அவ்வப்போது சேரும், கல்முனைப் பட்டணத்திலுள்ள தெருக்குப்பை கூழங்கள் யாவும் இக்குளத்தில் கொண்டு வந்து கொட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. என்றாலும் குளம் முழுவதுமாக மூடப்படவில்லை; ஓரளவு பாக்கி இருக்கவே செய்தது. என்றாலும், ''வெட்டுக்குளத்தை மூடுவதற்கு வித்திட்டவர்கள்'' என்ற பெருமை அவர்களையே சாரும்.

அந்நிலையில் 1975ம் ஆண்டு ஆனி மாதம் 9ம் திகதி வட, தென் பகுதிகள் ஒருங்கிணைந்து அல்ஹாஜ் எம். ஐ. ஹபீப் முஹம்மது அவர்களின் தலைமையில் 12 பேரைக் கொண்ட நம்பிக்கையாளர் சபை தெரிவான பின்னர் அவர்கள், வெட்டுக்குளத்தை முற்றாக மூடிவிடவேண்டும் என்று முடிவு செய்தார்கள். அதன் பிரகாரம், ஊரிலுள்ள சகல உழவு இயந்திர உரிமையாளர்களினதும், அதன் சாரதிகளினதும் உதவியோடு இரண்டு கிழமைக்குள் அக்குளம் மூடப்பட்டது.

''துர்நாற்றம் தொலைந்து தூய்மையானதே'' என்ற அங்கலாய்ப்பில், இவ்வூர் மக்கள் அப்பணியில் பங்குகொண்ட வேலையாட்களுக்குரிய தேனீர், சாப்பாடு ஆகியவற்றுக்கான செலவுகளை ஈடு செய்ய, கூப்பனுக்கு 10 சதவீதம், கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் செலுத்தி தங்களது அன்பான ஆதரவையும், மகிழ்ச்சியையும் தெரிவித்து உளம் பூரித்தார்கள்; நம்பிக்கையாளர் சபையையும் உற்சாகப்படுத்தினார்கள்!

## வெட்டுக்குளத்தில் மஸ்ஜித் விஸ்தரிப்பு

மஸ்ஜிதின் எல்லைக்குள் அக்காலம் முதல் இக்காலம் வரை ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டு வந்துள்ளன. வெட்டுக்குளம் இருந்த இடத்தைத் தவிர ஏனைய எல்லாப் பாகங்களிலும் அடக்கஸ்தலங்கள் நீக்கமற நிறைந்து காணப்படுவதால், விஸ்தரிப்பு வேலைகளை எவ்வாறு செய்வது என்ற சிக்கல் எழுந்தது.

ஆழமான ஆலோசனைகளின் பின்னர் மூடப்பட்ட வெட்டுக்குளப் பகுதியிலேயே அதனைச் செய்வது என்று தீர்மானித்து புனிதமான அவ் விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொண்டார்கள். இந்நிகழ்வு மக்களால் மறக்கப்படாத ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல் நாட்டுவிழா ஒரு கண்ணோட்டம்

1985ம் ஆண்டு ஆவணித்திங்கள் - வெள்ளி 9ம் நாளின் வருகையை, இவ்வூர்வாழ் மக்கள் மிகவும் ஆவலாய் எதிர்பார்த்திருந்தனர்; ஆம், அந் நாள் அவர்களுக்கு ஒரு பெருமைக்குரிய திருநாள்தான்! வெள்ளி பிறந் தது. முற்பகல் 10 மணிக்கே மக்கள் கூட்டம், ஊரின் நாலா பாகங்களி லிருந்தும்; அயல் ஊர்களிலிருந்தும் பள்ளியை நோக்கிப் பெருக்கெடுத்து வந்துகொண்டிருந்தது. பள்ளிவாசல் வளவின் வெளிப்பகுதி எங்கிலும்; நிழலுக்காய்ப் படங்குகளைக் கொண்டு பந்தல்கள் போடப்பட்டிருந்தன.

12 மணியானதும் 'குத்பா'வுக்கான 'பாங்கொலி' கம்பீரமாக ஒலித் தது. பகலவன் தனது பொன்னிறக் கதிர்களை மிக வேகமாய்ச் செலுத் திய வண்ணம் வான வீதியிலே மிதந்து கொண்டிருந்தான்.

சரியாக 12-10 மணிக்கு அவ்விழாவின் கதாநாயகன், கொடை வள்ளலும், இலங்கை மறுமலர்ச்சி இயக்கத் தலைவருமான அல்ஹாஜ் எம். ஐ. எம். நளீம் (ஜே. பி.) அவர்கள், அப்போதையக் கல்விப் பணிப் பாளரும், தற்போதைய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுச் செயலாளர் அல்ஹாஜ். எஸ். எச். எம். ஜெமீல் அவர்களோடு ஊர்ப் பிரமுகர்கள் புடைசூழ, அப்போது நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லை மாவட்ட அமைச்சரும், தற்போது வர்த்தக வாணிபத்துறை அமைச்சருமான ஆலி ஜனாப் ஏ. ஆர். மன்சூர் (சட்டத்தரணி) அவர்கள் சகிதம் மஸ்ஜித் வளவின் வாயலை வந்தடைந்தார். அவருடைய வருகையை மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த பள்ளிவாயல் பரிபாலன சபைத் தலைவர் அல்ஹாஜ் எம். ஐ. எச். முஹம்மது அவர் களும், சபை உறுப்பினர் 20 பேரும் அவர்களை எதிர்கொண்டழைத்து வந்து மஸ்ஜிதின் உள்ளே முன் வரிசையில் அமரச் செய்தனர்.

மஸ்ஜிதின் நாலா பக்கமும் அத்தர்மணம் கமழ, அன்றலர்ந்த தாமரை போல், மக்கள் வதனங்களெல்லாம் புன்னகை பூத்து நிற்க, சரி யாக பகல் 12-30 மணிக்கு அல்ஹாஜ் மௌலவி எஸ். எல். ரஹ்மத்துல்லாஹ் (பாரி) அவர்கள் மிம்பரில் ஏறி, ''மறுமை நாளில் எம்முடன் வருபவை'' என்ற மகுடத்தில் ''கொத்பா'' நிகழ்த்திக் கொண்டிருக்க, மக்கள் வெள் ளம் மஸ்ஜித் முழுவதையும் நிறைத்து, பந்தல்களாலும் வழிந்து, வளவெல் லாம் பரவி நின்ற காட்சி, என்றென்றும் எம் நெஞ்சத்தை விட்டகலாத ஒரு நிகழ்ச்சி.

அன்று ஜும்ஆத் தொழுகை 1-10 மணிக்கு முடிவடைந்ததும் பேஷ்இமாம் மௌலவி அஹ்மத் அவர்களின் கிராஅத்துடன் பொதுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் ஆரம்பமானது. நம்பிக்கையாளர் சபைத் தலைவர் அல்ஹாஜ் எம். ஐ. எச். முஹம்மது அவர்கள் தலைமை ஏற்றுத் தகவுரை தந்ததன் பின்னால், பிரதம அதிதி அல்ஹாஜ். எம். ஐ. எம். நளீம் (ஜே. பி.) அவர்கள் மக்கள் மனங்களை நெகிழச் செய்யும் வண்ணம் பேருரையாற்றினார்.

அன்றையக் கொத்பா - பிரசங்கத்தையே தொனிப்பொருளாகக் கொண்டு தனது பேச்சை ஆரம்பித்து, ''இப்றாஹீம் (அலை) அவர்கள் கஃபாவை எவ்வளவு விரைவாகக் கட்டி முடித்தார்களோ, அவ்வாறு இம்மஸ்ஜிதும் கட்டி முடிக்கப்படல் வேண்டும்'' என்று கூறி துஆ இறைஞ்சியபோது, எம் நெஞ்சங்களெல்லாம் நெக்குருகி நின்றன.

- ★ கூட்ட அழைப்பிதழ்
- ★ ஒலிபெருக்கி மூலம் அழைப்பு விடுத்த முறை
- ★ நளீம் ஹாஜியார் அவர்களின் பேச்சு
- ★ அன்றைய கொத்துபாப் பிரசங்கம்

அவை அத்தனையும், ''இந்த உலகில், இறைவனுக்காய் இல்லம் அமைப்பதற்கு யார் உதவி செய்கின்றார்களோ, அவர்களுக்கு நாளை மறுமையில் நாயன் நல்லதொரு மாளிகை அமைத்துக் கொடுப்பான்.'' என்ற நபி மொழியையே பறை சாற்றிக்கொண்டிருந்தன என்பது, இன்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு விடயம்!

மௌலவி பாஸில் எஸ். எச். எம். சாஹிப் (நத்வி - லக்னோ) அவர்கள், ''இஸ்திகாரா''வெனும் நன்மையை நாடித் தொழும் தொழுகையைப் பற்றி விபரமாக எடுத்துக்கூறிய பின், குழுமி இருந்த கூட்டத்தினர் தனித்தனியே இரண்டு ரக்அத் - சுன்னத் தொழுதுகொண்டனர். பின்னர் கல் நாட்டுமிடத்துக்கு, நளீமியா கலாபீடத்தின் தலைவர் சென்றடைந்தார். அங்கே, அல்ஹாமியா அரபுக் கல்லூரி மாணவர்கள் வெண்ணிற ஆடை தரித்து, வெண்புறாக்கள் போன்று, வீறுநடை போட்டு நின்ற காட்சி எம்மையெல்லாம் ஒரு உலுப்பு உலுக்கியது.

பெரியார் கல்லை நாட்டினார்கள். அதைத் தொடர்ந்து நமதூரின் முதுபெரும் அறிஞர் மௌலவி சுலைமாலெப்பை அவர்கள் ஒரு நீண்ட துஆப் பிரார்த்தனை செய்கையில் அழுதவண்ணமே இருந்தார்கள்; அதனைக் கண்ட மக்கள் வெள்ளமும் ஆறாய்க் கண்ணீர் வடித்தது. நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் மௌலவி அல்ஹாஜ் ஏ. எம். சம்சுதீன் (பாகவி) அறிவிப்பாளராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மதியபோசனம்

பள்ளிவாசல் தெருவில் அமைந்துள்ள தலைவர் அல்ஹாஜ் எம். ஐ. எச். முஹம்மது அவர்களின் இல்லத்தில் பகற்போசன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆம், தென்கிழக்காசியச் சீமை பேருவளையின் கொடை வள்ளலுக்கு, செந்நெல் விளைந்திடும் சீர்மிகு பிரதேசத்தின், செழுமைமிகு கிராமம் கல்முனைக்குடியின் பள்ளிவாசல் தலைவர் படைத்திட்ட பெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தல்லவா! மக்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு, பெரியார் நளீம் ஹாஜியார் அவர்களை அழைத்துவந்த காட்சி என்றென்றும் நெஞ்சை விட்டகலா நிகழ்ச்சியாகும்.

உணவு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மண்டபத்தில் தளபாட அமைப்பு ஒரு தனித் தன்மை வாய்ந்ததாக காணப்பட்டது. நளீம் ஹாஜியார் அவர்கள் அணிந்திருந்த காற்சட்டை, மேற்சட்டைகளின் நிறத்திலேயே அங்கு மேசைகள் போடப்பட்டிருந்தன; அதேபோல், அவர்களது தொப்பியின் நிறமான செந்நிறத்திலே கதிரைகளும் போடப்பட்டிருந்தன! பிரதம அதிதி உட்பட, வந்தவர்கள் அனைவரும் வயிறார மனமார விருந்துண்ட பின் கிழக்கிலங்கை மக்களால் மிகவும், கண்ணியத்துக்குரிய பெருமகனாய்க் கருதப்படுகின்ற ஷெய்ஹுல் ஃபலாஹ், மௌலானா, மௌலவி அல்ஹாஜ் எம். ஏ. முஹம்மது அப்துல்லாஹ் (ரஹ்மானி) துஆ செய்தார்கள்.

வந்தவர்கள் மகிழ, ஊர்மக்கள் உளம் பூரித்து நிற்க, ஏற்பாடு செய்தோர் இறும்பூதெய்ய கருணைமிகு இறைவனுடைய இல்லத்தின் கல் நாட்டு விழா கனகச்சிதமாய் நடந்து முடிந்தது; அல்ஹம்துலில்லாஹ். (தினகரன் 28-9-1985)

வேகந்தணியவில்லை: வியர்வை வற்றவில்லை, விரைவாகக் கட்டிட வேலைகள் ஆரம்பமாயின! அகழ் தோண்டப்பட்டது; அத்திவாரம் அகட்டப்பட்டது. ஆம், இரு மாடிகளுடன், சுமார் 5000 பேர் வரை ஒரே முறையில் நின்று தொழக்கூடிய வகையில் 192 அடி நீளம், 80 அடி அகலம் கொண்டதாகப் பள்ளிவாசலைப் பாங்குடன் அமைப்பதற்குரிய வேலைகள் யாவும் ஜரூர்படுத்தப்பட்டன. இதற்காக ஒரு கோடி ரூபாய் (தற்போதையப் பெறுமதி பல கோடிகள்) செலவாகுமென்றும் மூன்று கட்டங்களில் அதனை நிறுவி முடிப்பதெனவும் திட்டமிடப்பட்டது. அதற்கான வரை படத்தினைப் பிரபல பொறியியலாளர் அல்ஹாஜ் எஸ். எம். இப்றாலெப்பை அவர்கள் வரைந்ததோடு, அதனை மேற்பார்வை செய்யும் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டார்.

வேலைகள் வேகமாய் நடைபெற்றன! மக்களின் அன்பளிப்புக்களும் ஆதரவும் பெருகின. பள்ளிவாசல் வேலை அத்திவாரமிடப்பட்டு 128' x 80, விஸ்தீரண மாடி வேலை முடிவுற்றது. 29-04-1988ல் ஜும்ஆத் தொழுகையின் பின், வரவு செலவு அறிக்கை, சபையினரால் வாசிக்கப்பட்டது. அதன்படி வரவு 1419257/50 செலவு 1292992/50 = மிகுதிப்பணம் இருப்பில் இருப்பதாக, அவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்தது. 1989ம் ஆண்டளவில் பரிபாலன சபை பலவீனமடைந்து காணப்பட்டதால், நிர்மாண வேலையும் ஸ்தம்பித நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்நிலைக்குப் பல காரணங்கள் உள்ளன. இருந்த போதிலும், இங்கு அவற்றை விமர்சிப்பது எமது நோக்கமல்ல. இத் தம்பித நிலை நீடிக்க விரும்பாத ஆர்வமுள்ள மக்கள் 27-12-1991ல் பள்ளிவாசலில் ஒன்று கூடி ஜனாப் எம். எச். எம். ஆதம் (விரிவுரையாளர்) அவர்களின் தலைமையில் நிர்மாண வேலையை ஆரம்பிக்க மனப்பூர்வமாகத் தொழிற்பட்டும் வெற்றிகிடைக்காது வேதனையுடன் அமைதியடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து வொக்பு சபை 01-06-1992ம் திகதி ஜனாப் எம். எச். காரியப்பர் (முந்நாள் நீதிபதி) அவர்களின் தலைமையில் ஐந்து பேர் கொண்ட விசேட நம்பிக்கையாளர் சபை, பள்ளிவாசல் நிர்மாண வேலைகளைத் தொடரவேண்டும் என்று நியமித்தும் சாத்தியப்படவில்லை.

1993ம் வருடம் சித்திரை மாதம், கல்முனைக்குடியிலுள்ள அனைத்துப் பள்ளிவாசல் நிர்வாகிகளில் தலா இரண்டு பிரதிநிதிகள் வீதம் ஒன்று கூடி, வைத்திய கலாநிதி அல்ஹாஜ் ஏ. எல். எம். ஜெமீல் அவர்கள் தலைமையில் ஒரு சபை உருவாகியது. அச்சபை, பள்ளிவாசல் புனர் நிர்மாண வேலை மீண்டும் ஆரம்பித்துத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வேலைகள் துரித கெதியில் நிகழ்கின்றன; அல்லாஹ்வின் உதவியால், அதற்கு மக்களின் ஆதரவு மேலோங்கிக்கொண்டிருக்கின்றது! இப்புனித பணி தொடர, இவ்வூர் மக்களது உதவியும் ஒத்துழைப்பும் இன்றியமையாதது.

யாஅல்லாஹ்! இக்குழுவினரை ஸ்திரமாக்கி வைத்து பள்ளிவாசல் கட்டிட வேலைகள் பரிபூரணத்துவம் பெறப் பேரருள் புரிவாயாக! ஒற்றுமை ஓங்கிட, தீன் நெறி துலங்கிட, எம்மவர் நலமுடன் வாழ்ந்திட நல்லருள் பொழிந்திடுவாயாக! ஆமீன்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்ஜித் பற்றிய மணிமொழிகள்

''மஸ்ஜித்'' என்னும் பள்ளிவாசல்களைப் பற்றியும், அவற்றின் பராமரிப்புகள் பற்றியும் எடுத்துக்கூறும் இறை வசனங்களும், இறைதூதர் பொன்மொழிகளும் ஏராளம் உள்ளன. இருந்தும் சில மணிமொழிகளை மட்டும் இங்கு தருகின்றோம்.

**பள்ளியைக் கட்டியவர்களுக்கு சுவர்க்கத்தில் மாளிகை**

''எவனொருவன், ஒரு குருவிக் கூட்டினளவாகுதல், அல்லாஹ்வுக்காக ஒரு பள்ளிவாசலைக் கட்டினால் அவனுக்காக அல்லாஹ் சுவனபதியில் ஒரு மாளிகையே கட்டிக் கொடுப்பான்.'' — இப்னுமாஜா.

''அல்லாஹ்வுக்காக எவனொருவன் ஒரு பள்ளிவாசலைக் கட்டுவானாகில், அவனுக்காக அல்லாஹ் சுவர்க்கத்தில், அதைவிட விசாலமான ஒரு வீட்டைக் கட்டிக் கொடுப்பான்'' — தபரானி.

''எவனொருவன் – தொழக்கூடிய ஒரு பள்ளிவாசலைக் கட்டுவானாகில், அதைவிட விசேடமான ஒரு வீட்டை அல்லாஹ் அவனுக்காக சுவர்க்கத்தில் கட்டிக் கொடுப்பான்.'' — அஹ்மத்

''எவனொருவன், ஹலாலான பொருளிலிருந்து, அல்லாஹ்வை வணங்கும் ஒரு வீட்டைக் கட்டிக் கொடுப்பானாகில், அவனுக்காக அல்லாஹ் சுவர்க்கத்தில் முத்துக்கள், இரத்தினங்களினாலான ஒரு வீட்டை அமைத்துக் கொடுப்பான்.'' — தபரானி

''யாராகிலும் ஒருவன் முகஸ்துதியையோ, புகழையோ நாடாது ஒரு பள்ளியைக் கட்டுவானாகில் அவனுக்காக அல்லாஹ் சுவர்க்கத்தில் ஒரு வீட்டைக் கட்டிக் கொடுப்பான்.'' — தபரானி

''எவனொருவன் அல்லாஹ்வின் திருப்தியை நாடி ஒரு பள்ளியைக் கட்டுவானாகில், அல்லாஹ் அவனுக்கு அதுபோலொன்றை சுவர்க்கத்தில் கட்டிக்கொடுப்பான்.'' — புஹாரி

**அல்லாஹ்வின் இல்லம்**

''உண்மையாக பூமியில் அல்லாஹ்வின் வீடுகள் பள்ளிவாசல்களாகும். அதனைத் தரிசிப்பவர்களைக் கௌரவிப்பது அல்லாஹ்வுக்குத் தகுதியானதாகும்.'' — தபரானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பள்ளிவாசல் பக்திமானின் இல்லம்**

''பள்ளிவாசல் ஒவ்வொரு பக்திமானின் இல்லமாகும்.'' — தபரானி

**மஸ்ஜிதுக்குப் போவது ஒரு ஜிஹாத்**

''பள்ளிவாசலுக்குப் போவதும், வருவதும் அல்லாஹ்வின் பாதையில் உயிர்த்தியாகம் செய்வதில் ஒன்றாகும்.'' — தபரானி

**மறுமையில் ஒளி**

''இருட்டில் பள்ளிவாசல்களுக்கு, நடந்து செல்பவர்களுக்கு, மறுமை நாளில் ஒளியினால் அமைந்த மேடைகள் கிடைக்குமென்று சந்தோஷச் செய்தி சொல்வீராக (மறுமையில்) மனிதர்கள் பயந்து நடுங்குவார்கள்; ஆனால், அவர்கள் நடுங்கமாட்டார்கள்.'' — தபரானி

**பள்ளியில் சொந்த ஆதாயம் தேடுவது தடுக்கப்பட்டது**

''பள்ளிவாசலில் விற்பனை செய்பவனை அல்லது விலைக்கு வாங்குபவனை நீங்கள் கண்டால், 'உனது வியாபாரத்தில் அல்லாஹ் இலாபம் தராதிருப்பானாக' என்று அவனைப் பார்த்துக் கூறுங்கள். தவறிப்போன பொருளை (பள்ளியில் சத்தமிட்டுத்) தேடிக் கொண்டிருப்பவனைக் கண்டால், 'அல்லாஹ் உனக்கு அதை மீட்டுத்தராதிருப்பானாக' என்று அவனைப் பார்த்துக் கூறுங்கள்.'' — திர்மிதி

**இறுதிகாலத்தில் சில மனிதர்கள்**

''இறுதி காலத்தில் எனது உம்மத்துக்களில் சிலமனிதர்கள் தோன்றுவார்கள். அவர்கள் பள்ளிவாசலுக்கு வந்து வட்டம் வட்டமாக உட்கார்ந்திருப்பார்கள். இலௌகீகமே அவர்களுடைய எண்ணமாகும். அவர்கள் விரும்புவதும் இலௌகீகமாகும். நீங்கள் அவர்களுடன் கலந்து இருக்க வேண்டாம். அல்லாஹ்வுக்கு அவர்களைப்பற்றிய ஒரு தேவையுமில்லை.''

— இப்னுஹிப்பான் அறிவித்துள்ளதாக இஹ்யாவுல் உலூமுத்தீன் கூறுகிறது.

**பள்ளியில் நுழையும் உரிமை அச்சமுடையோருக்கேயுண்டு**

''அன்றி அல்லாஹ்வுடைய ''மஸ்ஜித்'' களில் அவனுடைய (திரு) நாமத்தைத் துதி செய்வதைத் தடுத்து, அவைகளைப் பாழாக்க முயற்சிப்பவனைவிட, மகா அக்கிரமக்காரன் யார்? அச்சத்துடனன்றி, அவைகளில் நுழைய அவர்களுக்கு உரிமையேயில்லை. (அவ்வாறிருக்க அதற்கு மாறாக நடக்கும்) அவர்களுக்கு இவ்வுலகில் இழிவுதான். அன்றி, மறுமையிலோ அவர்களுக்கு மகத்தான வேதனையுண்டு.''

— அல்குர் ஆன் 2; 114



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பள்ளியைப் பரிபாலிப்போர், அல்லாஹ்வுக்கு மிக்கவிருப்பமானவர்கள்**

''எனது அடியார்களில், எனக்கு மிகவும் விருப்பமானவர்கள் யாரென்றால், எனது விஷயத்தில் ஒருவரையொருவர் அன்புவைப்பவர்களும், எனது பள்ளிவாசல்களைப் பரிபாலிப்பவர்களும், நடு நிசியில் பாவ மன்னிப்புத்தேடுபவர்களுமாவர்,,,.'' — தபரானி

**பள்ளிவாசல்களைப் பரிபாலனஞ் செய்யத் தகுதியுள்ளோர்**

''எவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசித்து தொழுகையையும் கடைப்பிடித்து, ஸகாத்தும் கொடுத்து வருவதுடன், அல்லாஹ்வையன்றி மற்றெவருக்கும் பயப்படாமலும் இருக்கிறார்களோ அவர்கள் தாம் அல்லாஹ்வுடைய பள்ளிகளைப் பரிபாலனஞ் செய்யக் கூடியவர்கள். இத்தகையோர்தாம், நேரானவழியில் இருப்பதாக நம்பத்தக்கவர்கள்.,,

— அல் குர் ஆன் 9' 18

**பள்ளிகளைப் பராமரிக்கத் தகுதியற்றோர்**

இணைவைத்து வணங்குபவர்கள். அல்லது முஸ்லிமாகவிருந்தும் தொழுகையை நியமமாகத் தொடராதவர்கள்; சகாத்துக் கொடுக்க வசதி பெற்றிருந்தும் அதனைக் கொடுக்காதவர்கள்; அல்லாஹ்வைத்தவிரவுள்ள ஏனைய சக்திகளுக்கு அல்லது அரசியல் தலைவர்களுக்கு அஞ்சிப் பயந்து நடுங்குபவர்கள்; தம் சொந்தக்கீர்த்தியை - பள்ளி நிர்வாகத்தின் மூலம் தேடிக் கொள்ள நினைப்பவர்கள்; தமது மன விருப்பு வெறுப்புக்களைப் பூர்த்தி செய்து கொள்ள அந்நிருவாகத்தைப்பயன் படுத்த எத்தனிப்பவர்கள்; நடைமுறை வாழ்க்கையில் ஒழுக்கம் குறைந்தவர்கள்; ஹராமான வழி முறைகளில் சம்பாதித்து உண்பவர்கள்; மற்றமனிதர்களின் உரிமைகளைப் பறிப்பவர்கள்; பிறரின் சொத்துக்களை அபகரித்து வைத்திருப்பவர்கள்.................இவை போன்ற தீய பண்புகள் — நடத்தைகளையுடையோர், அல்லாஹ்வின் பள்ளிவாசல்களைப் பரிபாலனஞ் செய்ய எவ்விதத்திலும் தகுதியுடையோராகார். என்பது மேற்கண்ட, அல்குர் ஆனின் 9;18 ஆயத்தின் மூலமாகவும் அநேகம் ஹதீஸ்களின் வாயிலாகவும் அறியக் கிடக்கின்றது.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிவாசல்கள் பற்றி பிறமத அறிஞர்கள்

இஸ்லாம் மார்க்கம், மக்களிடையே என்றும் நிலைத்திருப்பதற்கும் நிறைவான செல்வாக்கைப் பெற்றிருப்பதற்கும் உரிய காரணமென்ன? இதுபற்றி ஆராய்ந்த பிறமத அறிஞர்கள் என்ன கூறியுள்ளனர் என்பதைச் சிறிது பார்ப்போம்.

பள்ளிவாசல்கள் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம், அவை முஸ்லிம் சமுதாயத்தில் பெற்றுத் திகழும் மகத்துவம்; தாழ்ந்த சமுதாயங்களை வீறுகொண்டெழவைக்கும் மான்மியம் முதலானவற்றை ஆய்ந்து பார்த்த, இஸ்லாம் அல்லாத அறிஞர்பலரோர். அவர்களில் ஒரு சிலரின் குறிப்புகளை மட்டும் இங்கு தருகின்றோம்.

வில்சன் காஷ் கூறுகிறார் —

''எங்காவது முஸ்லிம்கள் ஒரு கூட்டமாகக் குடியேறினார்களானால், அவர்களுடைய முதல் வேலை, அங்கு ஒரு பள்ளிவாயிலை அமைப்பதாக இருக்கும்; இஸ்லாத்தின் வலிமை ஆயுதத்திலும், இராணுவத்திலும் இல்லை; அதன்பள்ளிவாசலிலும், அதையொட்டிய ஒரு பள்ளி—மதரஸாவிலும்தான் இருக்கிறது!'' — நூல்: கிறிஸ்தவமும், இஸ்லாமும்.

போல் ஹரிசன் பகர்கிறார் —

''தொழுகைக்காகப் பயன்படுவதே பள்ளிவாயலின் முக்கிய அம்சமாகும். அத்துடன், அது குர்ஆனின் தொடக்கப்பள்ளியாகவும் மார்க்க சம்பந்தமான உயர்தர ஆய்வுக்கூடமாகவும் விளங்கும். பயணிகள் இராத் தங்கும் அமைதியிடமாகவும்; இரந்துண்டு வாழவேண்டிய நிலையிலுள்ள ஏழைகள் உறங்கிக் கொள்ள வசதியுடையதாகவும் ...... அது அமையும். இவ்வாறு இரக்கத்துடன் செயல்படும் பண்பு பள்ளி வாசலின் சிறப்பம்சமாகும். ஒரு முஸ்லிம், நகரில் பிச்சைக்காரர்களோ, பிரயாணிகளோ, ஆதரவற்றவர்களோ தங்குமிடமின்றித் தவிக்க வேண்டியதில்லை.''

— நூல்: *The Arab at Home* - அரேபியர் அவர் வீட்டில் பக். 236

*Erich W. Bethman* - ஈரிக் பெத்மேன் சொல்கிறார் —

சமுதாய வாழ்க்கையின் மத்திய கேந்திரமே பள்ளிவாசல்தான். இஸ்லாத்தினுடைய அற்புதமான செல்வாக்கின் இரகசியமும், இதில்தான் பொதிந்துள்ளது. ஐந்து நேரம் தொழுவதற்காக நம்பிக்கையாளர்கள் குழுவும் வணக்கஸ்தலமான பள்ளியும், ஒவ்வொரு பள்ளியோடும், குர்ஆன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதிக் கொடுப்பதற்காக இணைந்திருக்கும் எளிமையான மதரஸாவும்தான் பல்வேறு வகைப்பட்ட தேசிய இனங்களை — கதம்பப் பண்புகளையுடைய மக்கள் கூட்டத்தை — ஓர் உடன் பிறப்பினராக உருவாக்கிற்று — அது தான் இஸ்லாமிய சகோதரத்துவ சமுதாயம்.

— நூல்: *Bridge to Islam* - இஸ்லாத்துக்கு ஒரு பாலம். பக். 85

அவ்வாறு அநேகம், ஆங்கில ஐரோப்பிய அறிஞர்கள், கீழ்நாட்டு மேதைகளெல்லாம் ''சமுதாயப் புனரமைப்பில் மஜ்ஜிதுகளின் பங்களிப்பு'' பற்றி வியந்து கூறியுள்ளனர்.

''இஸ்லாத்தின் இனிய நாதம் நாள்தோறும் உயிர்த்துடிப்புள்ளதாக — என்றென்றும் ஒலித்துக்கொண்டிருப்பதற்கும், உலகின் ஒரு மூலையிலே முஸ்லிம்கள் வீழ்ந்து - தாழ்ந்து - சோர்ந்துபோய்க் கிடந்தால், மறுகோடி யிலேயிருந்து முஜாஹிதீன்கள் — வீரத்தியாகிகள் தோன்றித் தீரமிக்க போராட்டம் நடத்திவருவதற்கும், இன்னொரு பகுதியிலே சோர்ந்து, வீழ்ந்து பட்ட முஸ்லிம்கள் மீண்டும் வாரிச் சுருட்டி, வெகுண்டெழுவதற் கும், அம்மஸ்ஜித்களிலே வாரந்தோறும் நிகழ்த்தப்படும், ''கொத்பாத்'' பேருரைகளே முக்கிய காரணமாகும்.''

என்று, இஸ்லாத்தினுடைய பரம விரோதிகளே வாய்விட்டுக் கூறி யுள்ளனர்.

இறைவனுடைய உண்மை மார்க்கமாகிய இஸ்லாத்திலே குறைகாண முயன்ற குறைமதியாளர்கள், அதிலே தோல்விகண்டு, அம்மார்க்கத்தின் வணக்கஸ்தலங்களிலேயாகுதல் ஏதாவது விக்கினத்தைக் காண முடியுமா என்று இரவு பகலாக யோசித்து, யோசித்து மூளையைக் குழப்பி முடிவில் எதுவும் காணாது ஏங்கிய நிலையிலே தங்களது தோல்வியைப் பகிரங்க மாக ஒப்புக்கொண்டதன் விளைவாகவே - பள்ளிவாசல்கள் பற்றிய மேற் கண்ட கருத்துக்களை அவர்கள் வெளியிட்டுள்ளார்கள் என்றால், முஸ்லிம் களாகிய நாம் - அதிலும் குறிப்பாக கல்முனைக்குடி மக்களாகிய நாம், பள்ளிவாசல் விஷயத்திலே, இன்று காட்டும் அசமந்தப்போக்கு நல்லது தானா? சிந்தியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழக்கிலே ஒரு பரம்பரை

கி. பி. 5ம் நூற்றாண்டளவில் சேர நாட்டிலிருந்து (தற்போதைய கேரளா), முக்குவ குலத்தினர், பல்வேறு காரணங்களால் யாழ்ப்பாணம் வந்து குடியேறினார்கள். இவர்கள் அனைவரும் தமிழ்ப் பேசும் ஹிந்துக் கள்; யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்களும் தமிழ்ப்பேசும் ஹிந்துக்கள். என்றாலும் அவர்களிடையே தாண்டவமாடிய — உயர்ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற பாகுபாடானது, இந்த முக்குக குலமக்களைப் பெரிதும் வாட்டிற்று! நீண்டகாலம் அங்கு தாக்குப்பிடிக்க முடியாத நிலை உருவான போது படிப்படியாக இலங்கையின் கிழக்குக் கரை நோக்கி அம்மக்கள் நகரத் தொடங்கினர்.

இறுதியில் மட்டக்களப்பு (மட்டக்களப்பு-அம்பாறை)ப் பிரதேசத்தில் திரளாக வந்து குடியேறிய அம்மக்கள், தங்களுக்குள் ஓர் அரசையும் அமைத்துக்கொண்டனர். இவ்வாறு பல்லாண்டுகள் சீரும், சிறப்புமாக அம்மக்கள் வாழ்ந்துவந்த காலத்திலே, 'திமிலர்' என்னும் திராவிட இனத்தார் (இவர்களும் ஹிந்துக்கள்தாம்), திருகோணமலைப் பகுதிகளி லிருந்து வந்து, இவர்களுக்கு அநியாயம் செய்யத் தலைப்பட்டனர்.

காலத்துக்குக் காலம் முக்குக ராஜ்யத்துக்குள் படையெடுத்து வந்து இங்குள்ள பொருள்களைக் கொள்ளையடித்துச் செல்வதும், பெண்களை மானபங்கப்படுத்துவதும், கொலை செய்வதுமாக அடாவடித்தனங்களில் அவர்கள் ஈடுபட்டு வந்தார்கள்.

இக்கட்டத்தில் முக்குகர் தலைவரும், அவர் அரசும், அக்காட்டு மிராண்டிகளை விரட்டியடிக்கக்கூடிய அளவு பலம் பெற்றிருக்கவில்லை.

இப்படியாகச் சில காலம் உருண்டோடியது. அக்காலத்தில் எமது வங்காள விரிகுடாக் கடல், ''ARABIAN LAKE — அராபியர்களின் வாவி'' என்ற பெயரைப் பெற்றுத் திகழ்ந்தது; அந்த அளவுக்கு, அராபிய வணி கக் கப்பல்கள், வியாபாரத்தினிமித்தம் இக்கடலிலே வந்துபோய்க்கொண் டிருந்தன.

ஒரு நாள் எமது வங்கக்கடலின் மாமடியிலே ஆடி, அசைந்து தவழ்ந்து வந்துகொண்டிருந்தது ஓர் அராபிய வர்த்தகக்கப்பல். அகோரப் புயல் ஒரு பக்கம், கடுமையான கடற் கொந்தளிப்பு மறுபக்கம் இவை இரண்டுக்கும் மத்தியில் சிக்கித் திசைதெரியாது தடுமாறிக் கொண்டிருந் தது அது.



14170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மணித்தியாலங்களாக இயற்கையின் சீற்றத்தோடு, ஜீவமரணப் போராட்டம் நடத்திய மாலுமிகளும், வர்த்தகர்களும் ஒரு கரையைக் கண்டார்கள்; அதுதான் கல்முனைக் கடற்கரை!

தட்டுத் தடுமாறித் தம் கப்பலை, அந்தக்கரையை நோக்கிச் செலுத்தியபோது, அங்கே முனை போன்று நீட்டிக் கொண்டிருந்த ஒரு பாறைக் கல்லில் மோதுண்டு அது உடைந்தது. இக்கல், தற்போதைய, கல்முனை வாடிவீட்டுக்கு நேரே, ஏறத்தாழ ஒரு மைலுக்கப்பால் கடலில் காணப் படுகின்றது.

பின்னரும் கூட — காலத்துக்குக் காலம் பிறநாட்டுக் கப்பல்கள், இயற்கையின் அனர்த்தங்களுக்குள்ளாகி, திசை தப்பிவந்து அப்பாறையில் மோதுண்டு சின்னாபின்னமாகியுள்ளன. அப்படியான சம்பவங்களை எம்முடைய காலத்திலும் நேரடியாகக் கண்டிருக்கின்றோம். அப்பாறைக் கல்லை ஆதாரமாகக் கொண்டு, 'கல்முனை' என்ற பெயர் இப்பகுதிக்கு வந்திருக்கலாம்.

விபத்துக்குள்ளான அவ்வராபியக் கப்பலில் இருந்தவர்கள் நீந்திக் கரை சேர்ந்து, கடற்கரையில் மயக்கமுற்றுக் கிடந்தனர்.

அப்போது கடற்கரைக்குத் தாழம்பூ பறிக்கச் சென்ற முக்குக குலப் பெண்கள், அவர்களைக் கண்டு முதலுதவிகள் செய்தபின்னர் அவ்விடயத்தை அவர்களுடைய மன்னனுக்கு அறிவித்தார்கள். அம்மன்னரும், அவ்வராபியர்களை ஆதரித்து, வைத்திய சிகிச்சைகள் செய்து உபசரித்தார்.

சில நாட்கள் இப்பகுதியில் தங்கி ஓய்வெடுத்து உடல்நலம் தேறிய பின்னர், தங்கள் தாயகம் செல்லத் தயாரானார்கள் அவர்கள். இந்த வேளையில் தம்பிரதேசத்துக்கும், தம்குலமக்களுக்கும் எதிரிகளால் அடிக்கடி விளைந்துகொண்டிருக்கும் ஆபத்துக்களையிட்டு, அவர்களிடம் முறையிட்டார் அவ்வரசர். அதனைக் கேட்ட அவர்கள் இங்கே மேலும் சிலகாலம் தங்க முடிவு செய்தனர்.

நல்ல திடகாத்திரம் படைத்த, இப்பகுதி வாலிபர்களையெல்லாம் திரட்டி அவர்களுக்கு யுத்த முறைகளைக் கற்றுக்கொடுத்து, மேலும் தேவையான பயிற்சிகளையும் அளித்தனர்.

காலமும் வந்தது; எதிரிகள் படையெடுத்து வந்தார்கள். அவர்களைத் தமது பிரதேசத்துக்குள் ஊடுருவ விடாது, எல்லைப்புறத்தில் தடுத்து நிறுத்தி அங்கேயே யுத்தம் புரிய வேண்டும் என இவர்கள் திட்டமிட்டு, ''புளியந்தீவு'' (மட்டக்களப்பு)க்கு அப்பால் வடக்கே முன்னேறிச் சென்று போரிட்டார்கள். இப்போராட்டத்தில் மாபெரும் வெற்றியீட்டிய அவர்கள், எதிரிப்படைத் தலைவனையும் கொன்று அவ்விடத்திலே புதைத்தனர். அந்த இடம்தான், ''சத்துருக்கொன்றான்'' என்று அழைக்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பாதைகளில் சத்துருக்களை விரட்டிச் சென்றவர்களெல்லாம் திரும்ப வந்து சந்தித்த இடம் ''சந்திவெளி''எனச் சொல்லப்படுகிறது.

அவர்களெல்லோரும் வந்தமர்ந்து ஆறுதல் எடுத்து, விருந்துபடைத்து உண்டு மகிழ்ந்து, வெற்றிவிழாக் கொண்டாடிய இடம்தான், ''வந்தாறுமூலை எனப்படுவது.

அப்பால் சில நாட்கள், இம்மண்ணில் தங்கியிருந்த அரபுகள் தங்கள் நாட்டுக்கு போகப் புறப்பட்டபோது, முக்குவ குலமக்களும், அவர்கள் அரசரும் அன்பு நிறைந்த வேண்டுகோள் ஒன்றை அவர்களிடம் விடுத்தனர். அதாவது:

'தாங்கள் செய்த உதவியை எங்களால் என்றுமே மறக்கவியலாது. எங்களின் உடற்பிறப்புகளாகவே உங்களை நாங்கள் கருதுகின்றோம். அராபிய சகோதரர்களே! தோற்றோடிய சத்துருக்கள் எம்மைச் சங்காரம் செய்ய சங்கற்பம் பூண்டு, திரும்பவும் படையெடுத்து வரலாம். ஆதலால் நீங்கள் இங்கேயே தங்கிக் குடிபதிகளாகி முல்லை, மருதம், நெய்தல் முதலான வளங்களைக் கொண்டுள்ள எம்திருநாட்டின் பிரஜைகளாகி விடுங்கள்! ''நபி'' என்று சொன்னீர்களே, உங்சள் தலைவர் நபிகள் நாயகத்தின் மணிமொழிகள் எம்மண்ணிலும் ஒலிக்கட்டும்!

என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

''மேலும் பலவீனர்களாக்கப்பட்ட, அடக்கி ஒடுக்கப்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்காக இறைவனின் வழியில் நீங்கள் போர் புரியாமல் இருக்க என்னதான் காரணம்? அவர்களோ, ''எங்கள் இறைவனே! அக்கிரமக்காரர்கள் வாழும் இவ்வூரிலிருந்து எங்களை வெளியேற்றுவாயாக! மேலும் எங்களைப் பாதுகாக்கக்கூடிய ஒருவரை உன்னிடமிருந்து தோற்றுவிப்பாயாக!'' என்று பிரார்த்தனை செய்கிறார்கள்'' 4;75

''மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்துதான் சிருஷ்டித்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால், உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை. எனினும்), உங்களில் எவன் மிகவும் பயபக்தியுடையவனாக இருக்கின்றானோ, அவன் தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியவான். நிச்சயமாக அல்லாஹ் (யாவையும்) நன்கறிந்தோனும், நன்கு தெரிந்தோனுமாக இருக்கின்றான்.'' — 49;13

என்று, அல்லாஹ் அல்குர்ஆனில் எடுத்தோதியுள்ள ஆயத்துக்களையெல்லாம் தங்கள் அகங்களில் ஆழமாகப் பதிவு செய்து கொண்ட பெருமக்களல்லவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்ற உலகாதய நோக்கில் மட்டும் வந்தவர்களல்லவே அவர்கள், மாறாக, ''திரைகடலோடியும் தீன் (Dheen) நெறிபரப்பிடத் தயங்கிடீர்.'' என்ற பாரம்பரியத்திலே வந்தவர்களாயிற்றே! ஆதலால் ஆட்சித் தலைவனின் அன்பு கலந்த அரவணைப்பை அலட்சியம் செய்திட அவர்கள் விரும்பவில்லை.

எனவே அல்லாஹ்வின் பூமியிலே, அவனது அடியார்கள் கூட்டத்தில் ஒரு குலத்தினரின் விடிவுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள் அவர்கள். எம் அன்னையர் குலமாம் முக்குகர் வம்ச மாதர்களை மணந்து, அவர்களுக்குச் சன்மார்க்கம் புகட்டி சந்தோஷமான முறையில் தம் வாழ்க்கையை இம்மண்ணில் ஆரம்பித்தார்கள்.

முக்குக குலமக்களும், வேந்தரும் தம் குலத்தின் 16 குடிகளிலிருந்தும் பெண்கொடுத்து — சம்பந்தம் கலந்து அவர்களைத் தம் உறவினராக்கிக் கொண்டதுடன், இப் பிரதேசமெங்கும், இவ்விருதரத்தாரும் கலந்து - பகிர்ந்து இரத்தபாசத்தோடு வாழும் வகையில் குடியிருப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து, முக்குவ குலத்தினரிடையே இஸ்லாம் பரவியதுடன், பிறநாட்டு முஸ்லிம்களது தொடர்பும் அதிகரிக்கலாயிற்று.

தமிழர்களான முக்குவ மக்களினதும், ஏனைய தமிழ்க் குலங்களைச் சார்ந்த மக்களினதும் பாதுகாப்பைக் கருதி — தமிழர் குடியிருப்புக்களை அடுத்தடுத்து முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டார்கள்.

அந்த வகையில், அதுநாள் வரை யாருமே குடியேறாதிருந்த ஏறாவூர்க் கிராமம் முஸ்லிம்களுக்கென — முதன் முதலாக ஒதுக்கப்பட்ட இடமாகும்.

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்புப் பிரதேசம் (அம்பாறை மாவட்டம் உட்பட) எங்கும், அடுத்தடுத்து — ஒரே இனத்தைச் சார்ந்த முஸ்லிம்களும் தமிழர்களும், தேங்காய்ப்பூவும், மாவும் சேர்ந்த பிட்டுப் போல வாழலாயினர்.

பிரித்தானியர் காலத்திலிருந்து அரச சேவையில் பணியாற்றிய பெருந் தலைவரும், மட்டக்களப்பு முதல் பாணமை வரை உகனை ஈறாக ராஜ சேவை புரிந்து, பண்டைய சரித்திரத் தெளிவு பெற்றவருமான முந்நாள் பாராளுமன்ற அங்கத்தவர் - அமைச்சர், இராசவாசல் முதலியார் மர்ஹூம் *M. S.* காரியப்பர் *J. P. U. M.* அவர்களின் ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு மேற்கண்ட வரலாற்றுச் சம்பவத்தை எழுதலானோம்.

இனி — வித்துவான், பண்டித, வி. சி. கந்தையா *B O. L.* அவர்களால் எழுதப்பட்ட ''மட்டக்களப்புத்தமிழகம்'' என்னும் நூல் அவ்விடயம் சம்பந்தமாக என்ன கூறுகிறதென்பதைப் பார்ப்போம்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...இலங்கையின் சிறப்பைக் கேள்வியுற்று வட இந்தியாவிலிருந்து திரண்டு வந்த முற்குகர் கூட்டத்தினர் ஈழத்தின் கிழக்குக் கடல் வழியாக வந்து உப்பு நீர் ஏரி ஒன்றின் ஊடே நாட்டினுட் புகுந்து தம் ஓடங்களைச் செலுத்திச் சென்றனரென்றும், தெற்கு நோக்கி நீண்ட தூரம் சென்ற அவரது ஓடங்கள் தரை தட்டியதும் அவ்வேரியின் எல்லைக்குத் தாம் வந்துவிட்டதை அறிந்து அந்தப் பகுதிக்கு 'மட்டக்களப்பு' (களப்பு மட்டம் - வாவியின் எல்லை) என்று பெயர் நிறுவினர் என்றும் வழங்குகின்ற ஒரு கேள்விச் செய்தி இக்கருத்தையே வலியுறுத்துவதாகும்.

"காடு கெடுத்து நாடாக்கி, ஏழு கிராமங்களை வெவ்வேறு இடங்களில் அமைத்துத் தம்மூரிலிருந்து மக்களைத் தொடர்ந்து குடியேற்றிச் சிற்றரசுகளை இந்நாட்டிற்கோலிய முக்குகரே மட்டக்களப்பு மண்ணை வளம் கொழிக்கச் செய்த முதல் மக்கள் என்று தெரிகின்றது. அவர்கள் இங்கு வரும்போது களப்பின் (மட்டக்களப்பு வாவியின்) கரையோரங்களிற் 'திமிலர்' என்ற மீன்பிடி வகுப்பினர் குடியேறி வாழ்ந்தனரென்றும் அவர்களுடன் முற்குகருக்கு அடிக்கடி கலகங்கள் நிகழ்ந்தனவென்றும் தெரியவருகிறது. திமிலர் மட்டக்களப்பிற் தமக்கென முதலில் அரண் செய்துகொண்ட இடமே 'திமிலதீவு' என்றும், அவர்கள் வலைகளைக் கட்டிப் பெருமீன்களை அகப்படுத்திய இடமே 'வலைகட்டிறவு' (வலைஇறவு) என்றும் இக்காலம் வழங்கப்பெறும் இடங்களாம் என்பர். முற்குகருக்கும் திமிலருக்கும் ஏற்பட்ட கலகங்கள் வளர்ந்து பெரும் போராயின. அக்காலம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து வியாபாரம் செய்துகொண்டிருந்தவர்களான பட்டாணியர்களின் உதவியையும் பெற்றுக்கொண்ட முற்குகர், திமிலரை வென்று அவர்களை வடக்கே வெருகல் கங்கைக்கு அப்பால் துரத்திவிட்டார்கள். இந்தப் போரின் சின்னங்கள் போன்று இன்னும் சில ஊர்ப்பெயர்கள் காணப்படுகின்றன. முற்குகர் பதுங்கி இருந்து தம் பகைவரைத் தாக்கிக் கொன்ற இடம் 'சத்துரு கொன்றான்' எனவும், பகைவரை நாற்புறமும் துரத்திச் சென்ற படைகள் வெற்றியுடன் மீண்டுவந்து சந்தித்த பெருவெளி 'சந்திவெளி' எனவும், அப்படையினர் வந்து ஆறியிருந்து மகிழ்ச்சி கொண்டாடிய இடம் 'வந்தாறுமூலை' எனவும், தமது சத்துருக்களைக் கொல்ல உதவி புரிந்த பட்டாணியரைக் குடியேற்றியதோடு, பகைவரான திமிலர் மீண்டுவந்து தம்மூர்களுட் குடி ஏறா வகையிலும் அரண் செய்த ஊர் 'ஏறாவூர்' எனவும் இன்னமும் பெயர் மாறாது வழங்கப்படுகின்றன. நீண்ட காலமாகத் தொடர்ந்து கேள்வி வாயிலாக அறியப் பெற்றுவரும் இச்சாதியினர் தொடர்பாக உள்ள இடப்பெயர் முதலியனவெல்லாம் தமிழிலேயே இருப்பதால் இவர்களது மொழி தமிழே என்றும் இங்கு கொள்ளப்படுகின்றன.

திமிலர், முற்குகர், பட்டாணியர் என்பாருக்கு முற்பட்டுக் கிழக்கிலங்கையில் மக்கள் வாழ்ந்தனரா என்பதும், அவர்களுக்குப் பின்னருங் குடியேற்றங்கள் இங்கு நடந்திருக்கின்றனவா என்பதும் எல்லாம் இன்னும் ஆராய்ச்சிக்குரியவையே..." என்று அந்நூல் கூறுகிறது.

பக். 391, 392, 393



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதி வாழ் மக்களின் கலை, கலாச்சாரம், வரலாறு, சமயம் முதலானவற்றை எடுத்தியம்பும் மற்றுமொரு நூல் ''மட்டக்களப்பு மான்மியம்'' என்பதாகும். அவை எல்லாவற்றிலிருந்தும் பெறப்படுகின்ற தகவல் ஒன்றாகவே இருக்கின்றன.

ஆனால், முதலியார் காரியப்பர் அவர்களின் ஆவணங்களிலிருந்து முக்குவருக்கு உதவியவர்கள் அராபியர்கள் என்றும், அவர்களுடைய வர்த்தகக் கப்பல் பெரும் புயலிலும், கடற் கொந்தளிப்பிலும் அகப்பட்டு கல்முனைக் கரையில் வந்து, பாறையில் மோதி உடைந்ததெனவும் அறிகிறோம், 'மட்டக்களப்புத் தமிழகம்' என்னும் நூல் இந்தியாவிலிருந்து பட்டாணியர்கள் வர்த்தகத்திநிமித்தம் வந்தனர் எனவும் கூறுகின்றது.

அக்காலத்தில் பட்டாணியர் வருகையும் இருந்ததென்பதை நாம் மறுக்கமுடியாது. எது எப்படி இருந்தபோதிலும் அராபியரும், பட்டாணியரும் முஸ்லிம்களேயாவர். அவர்கள் மூலமே இப்பிரதேசமெங்கும் இஸ்லாம் பரவிற்று. அம்முஸ்லிம்கள் முக்குகர் குலத்திலும், ஏனைய தமிழ் குலங்களிலிருந்தும் பெண்களை திருமணம் முடித்து அவர்கள் மூலமாகப் பிறந்தவர்களே, மட்டக்களப்புப் பிரதேச முஸ்லிம்களாகிய எம்மில் பெரும்பாலோர் (90% சதவீதத்தினர்) அதற்குத் தக்கசான்றாய்த் திகழ்வது தான் தமிழர் - முஸ்லிம்களிடையே நிலவிவரும் வகுத்துவார் (குடி) முறை.

பிற்காலத்தில் போத்துக்கேயர், ஒல்லாந்தர், பிரிட்டிசார் ஆகியோர் அதிகாரத்தைக் கொண்டு - ஆயுதமுனையில் தங்கள் சமயத்தை இப்பிரதேசத்தில் திணித்தார்கள்; ஆனால், ஆரம்பகாலத்திலேயே இஸ்லாத்தை இம்மண்ணின் புத்திர, புத்திரிகள் - தங்கள் மன்னனின் மகிழ்வான இசைவோடு ஏற்று இன்பம் கண்டனர்.

"மார்க்கத்தில் (இறை நெறியை மேற்கொள்வதில்) யாதொரு கட்டாயமோ, நிர்ப்பந்தமோ இல்லை'' (2;256) என்ற அல்குர்ஆனின் ஆணைக்கொப்ப முஸ்லிம்கள் நடந்து கொண்டார்கள்.

ஆக, இப்பிரதேசத்தின் பூர்வீக சமயங்கள் ஹிந்து தருமமும், இஸ்லாம் மார்க்கமுமேயாகும். ஆதலால் இப்பிரதேசத்தில் வாழும் எம் உடற்பிறப்புகளான தமிழ் மக்களை, நாம் எந்தவகையிலும் எட்ட நின்று பார்க்க முடியாது; முஸ்லிம்களாகிய நாம் அவர்களுடைய வகுத்துவார் என்ற உணர்வு அவர்களுக்கு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி.

வெறும் லோகாதய உணர்வுகளால் - எதிர்காலத்தில் எவ்வித நன்மையும் தரமுடியாத - தீமையே பயக்கக்கூடிய எண்ணங்களால் உந்தப்பட்ட ஒரு சிலரின் பயங்கரவாத நடவடிக்கைகள் எம்மிடையே கசப்புணர்வுகளைத் தோற்றுவித்துள்ளன; இருந்தபோதிலும் அவை நீடிக்கப் போவதில்லை! ஏனெனில், மட்டக்களப்புத் தமிழ்ப் பேசும் மக்களாகிய எம்முடைய வரலாறு மகத்துவமானது; புனிதமானது; புகழுக்குரியது! ஆகவே, இவ்விருசாராரும் ஒன்றுபட்டுத் தங்களுடைய பாரம்பரிய மிக்க உணர்வுகளை மீண்டும் மலரச் செய்வார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபசரித்து, உற்சாகமூட்டி, உதவி புரிந்தோர்:

இந்நூலை அச்சிட்டு வெளியிட உதவி புரிந்தோர் - இவர்கள் இவ் வரலாற்று நூலில் இடம்பெறுவதன் மூலம் – எதிர்கால சந்ததிகளாலும் - சரித்திரம் உள்ளளவும் நினைவு கூரப்படும் பேற்றினைப் பெறுகிறார்கள்! இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிடுவது சம்பந்தமாக, ஆலோசனையும், உதவியும் கேட்டுச் சென்றபோது உபசரித்து, உற்சாகமூட்டி, உதவிபுரிந்த - இன்முகம் காட்டி, இன்சொல் பகர்ந்து ஆவன செய்த இப்பெருமக்கள் சமுதாயத்தின் நன்றிக்குரியவர்கள்; எங்களின் பாராட்டுக்குரியவர்கள்.

ஜிஃகோ குறூப் – *Jifco Group* (நூல் அட்டையை அச்சிட்டு உதவியவர்கள்)
மௌலவி. S. M. ஆரிப் (நத்வி-லக்னோ) அவர்கள்
ஜனாப். M. U. தாஹா செய்னுத்தீன் (சட்டத்தரணி) ,,
அல்ஹாஜ். A. L. உதுமாலெப்பை (மல்லிகா) ,,
ஜனாப். S. L. தங்கராசா (கிளி-மார்க்கட்) ,,
அல்ஹாஜ். M. I. M. முஸ்தபா (கொழும்பு ஹாட்வெயார்) ,,
ஜனாப். S. உதுமாலெப்பை (இளையதம்பி - ஐஸ்வாடி) ,,
அல்ஹாஜ். S. H. M. இஸ்மாயீல் (பியூட்டி சில்க் ஹவுஸ்) ,,
ஜனாப். P. T. சாஹுல் ஹமீது (அமீர் ஸ்டோர்ஸ்) ,,
அல்ஹாஜ். M. I. M. யூசுப் (ஜெஸீலா கோல்ட் ஹவுஸ்) ,,
ஜனாப். S. L. காலிதீன் (நௌஸாத் ஸ்டோர்ஸ்) ,,
அல்ஹாஜ். S. M. சாஹுல் ஹமீது (ஈஸ்ரன் ஹாட்வெயார்) ,,
ஜனாப். P. A. ரஸ்ஸாக் (மார்க்கட்) ,,
அல்ஹாஜ். H. M. உதுமாலெப்பை (பியூட்டி கோல்ட் ஹவுஸ்) ,,
ஜனாப். M. I. M. பஷீர் (மார்க்கட்) ,,
அல்ஹாஜ். A. B முத்தலிபு (ஜெஸ்மின் ரேடர்ஸ்) ,,
ஜனாப். A. M. சேஹுலெப்பை (மார்க்கட்) ,,
ஜனாப். M. B. M. ஹுஸைன் (சீப்சைட்) ,,
அல்ஹாஜ். A. L. பளீல் (சிட்டி கோல்ட் ஹவுஸ்) ,,
ஜனாப். C. M. வஹாப் (ஐஸ்வாடி) ,,
ஜனாப். M. M. இஸ்மாயீல் - அதிபர் (தலைவர் M. P. C. S.) ,,
ஜனாப். M. A. சுலைமாலெப்பை (வ. வி. சாளம்பை) ,,
ஜனாப். N. M. காரியப்பர் (சட்டத்தரணி) ,,
ஜனாப். N. A. ஷஅபான் சாஹிப் (பாபுஜீஸ்) ,,
ஜனாப். M. S. M. ஹனீபா (நுபா ரேடர்ஸ்) ,,
ஜனாப். H. M. ஹரூஸ்தீன் ,,
ஜனாப். U. A. ஜப்பார் (யுனிகோ எம்போரியம்) ,,
ஜனாப். M. M. அப்துல்ரஸாக் (அமினாஸ் ஜுவலரி) ,,
ஜனாப். M. S. மொஹிதீன் (அரிசி ஆலை) ,,
ஜனாப். A. L. M தமீம் (சென்ரல் ஹாட்வெயார்) ,,
ஜனாப். A. L. சுலைமாலெப்பை (கொழும்பு ஹாட்வெயார் சென்ரர்) ,,
அல்ஹாஜ். M. A. ஹம்ஸா (செந்தாமரை) ,,
அல்ஹாஜ். N. M. H. மொஹிதீன் (லலிதா நகை மாளிகை) ,,
அல்ஹாஜ். A. செய்னுல் ஆப்தீன் (கிதாபி) ,,
ஜனாப். M. I. A. ரஊப் (கிரவுண் ஸ்ரோர்ஸ்) ,,
அல்ஹாஜ். M. சீனிமுஹம்மது (ஜின்னா ஜுவலரி) ,,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கையாளர் சபை நியமன காலகட்டங்கள்

1964 — முதலாவது நம்பிக்கையாளர் சபை நியமனம்
1965 — இரண்டாவது நம்பிக்கையாளர் சபை நியமனம்
1975 — மூன்றாவது நம்பிக்கையாளர் சபை நியமனம்
1977 — நான்காவது நம்பிக்கையாளர் சபை நியமனம்
1982 — ஐந்தாவது (விசேட சபை 5 பேர் முந்தியவர்களிலிருந்து)
1984 — ஆறாவது நம்பிக்கையாளர் சபை நியமனம்
1987 — ஏழாவது நம்பிக்கையாளர் சபை நியமனம்
1990 — எட்டாவது நம்பிக்கையாளர் சபை நியமனம்
1992 — ஒன்பதாவது (விசேட சபை 5 பேர் - புதியவர்கள்)

★

# குலவிருதுகள்

ஒவ்வொரு குடிக்கும் தனித்தனிச் சின்னம் உண்டு. அதை 'விருது' என்று சொல்வார்கள். தமிழர்களிலும், முஸ்லிம்களிலுமுள்ள ஒவ்வொரு குடியாரும் தத்தமது பசு, எருமை முதலான கால்நடைகளுக்கு, அதன் சந்துப் பட்டையில், தம் குல (குடி)ச் சின்னத்தைக் குறியிடுவர். அதைத் தொடர்ந்து தமது பெயரைக் குறிக்கும் முதல் எழுத்துக்களையும், ஊரின் தலை எழுத்தையும் பொறிப்பது வழக்கம்.

பல குடிகளின் விருதுகளை எம்மால், தற்காலத்தில் தேடியெடுப்பது கஷ்டமாகிவிட்டது. எனினும் தற்போது கிடைக்கப்பெற்றவற்றை மட்டும் இங்கு தருகிறோம். 'பட்டிக்காரர்' என்று சொல்லும் மாடு வளர்ப்போர் மத்தியில், இவ்வழக்கம் இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிகளும் சின்னங்களும்



மாந்தறாகுடி



ஒடாவிகுடி



ராசாமபிள்ளைகுடி



படையாண்டகுடி



கொசுக்கட்டகுடி



பணிக்கனாகுடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிகளும் சின்னங்களும்



மணைக்காண்ட குடி.



உத்துப்பிள்ளை குடி



வெள்ளரசங்குடி



ஆலிம்குடி



பொண்ணாச்சி குடி



காமநாசர்குடி



இலவ குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *LAND requested for JUMMA MOSQUE KALMUNAIKUDDY*

*Scale: 1:2000*




*Boundaries:*

N: Land of M P C S (State)
S: Land of Mackbool (State)
E: Main Road.
W: Kulam (Stream)

*Reference:*

Land requested by the trustees of Kalmunaikuddy Jummah Mosque: State land
Extent: 30 phs.

K. S. 15-1-88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. M. JALALUDEEN F. S. I. (Sri Lanka)
Licensed Surveyor & Leveller,
Court Commissioner & Valuer,
Kalmunai.

PLAN No: 42

## Property of Kalmunaikudy Jummah Mosque




*Reference:*

W: Wall
U: Underfined
G: Garden
WLF: Wire Live Fence
F: Foundation
Road (H):
Road Highways
1 Hectare = 2.47 Acres

*Scale: 2 Chains to One Inch*

# PLAN

*Of an allotment of Land called Kalmunaikudy Jummah Palli Valavu situated in Kalmunaikudy in Karavahupattu Kalmunai A. G. A's Division*

AMPARAI DISTRICT
EASTERN PROVINCE

*Bounded as follows:*

North: Mosque Road
East: Lane
South: Mathrasa Road
West: Road (H)

Containing in Extent 2-2-30 (A R P) (1.08806 Hectares) Two Acres, Two Roods, Thirty Perches.

*Boundaries surveyed pointed out by Al-Haj Mohamed Ismail Habeeb Mohamed, Chief Trustee, Jummah Mosque, Kalmunaikudy.*

Surveyed on 23rd February 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய பள்ளிவாசலின்
## பல்வேறு தோற்றங்கள் 1933 - 1993

பொது நூலகம்
கல்முனை
1996



முன்புறத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளையில் பொழியப்பட்டுள்ள குறிப்பு (ஆண்டு விபரம் அரபியில்)



வளையில் பொழியப்பட்டுள்ள குறிப்பு (ஆண்டு விபரம் தமிழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலைப்பாடுகள் மிகுந்த தூண்களும், உட்புறத்தோற்றமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைவாசலையடுத்து வலப்புறத்தே அமைந்துள்ள சிறுவாயிலும்,
புதிய பள்ளிவாசலின் வரைபடமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1976ம் ஆண்டு செய்யப்பட்ட
சிறுதிருத்தத்தின்படி விறாந்தைத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்மவரின் கைவண்ணத்தில் உருவான - கலையம்சம் நிறைந்த
உட்பள்ளியின் தலைவாசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைமைச் சிற்பி ஜனாப் நெய்னாமுஹம்மது (ராசா ஓடாவியார்) அவர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தி நிற்கும் - கதவு நிலையின் மேல் அமைந்துள்ள பூவேலைப்பாடு. இதில் அவருடைய பெயர் அரபி மொழியில் பொறிக்கப் பட்டுள்ளது; கூர்ந்து அவதானிப்போர் புரிந்து கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



09 – 08 – 1985 ல் ஆரம்பிக்கப்பட்ட 4வது நிர்மாணப்பணியைத் தொடர்ந்து 1989ம் ஆண்டுவரை நடந்துள்ள வேலையும் – சிறிது இடைவெளியின் பின்னர் தற்போது, மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் காட்சியும்
(உட்புறத் தோற்றம் ஒரு பகுதி)

14170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கல்முனை
02-4-1996
මහජන පුස්තකාලය
කල්මුනේ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. Mankind was one single nation, And God sent Messengers With glad tidings and warnings; And with them he sent The Book in truth, To judge between people In matters wherein They differed; But the People of the Book, After the clear Sings Came to them, did not differ Among themselves, Except through selfish contumacy. God by His Grace Guided th Believers To the Truth, Concerning that Wherein they differed. For God guides Whom He will To a path That is straight.

٢١٣- كَانَ النَّاسُ أُمَّةً وَّاحِدَةً
فَبَعَثَ اللّٰهُ النَّبِيّٖنَ مُبَشِّرِيْنَ وَمُنْذِرِيْنَ
وَاَنْزَلَ مَعَهُمُ الْكِتٰبَ بِالْحَقِّ
لِيَحْكُمَ بَيْنَ النَّاسِ
فِيْمَا اخْتَلَفُوْا فِيْهِ ۗ وَمَا اخْتَلَفَ فِيْهِ
اِلَّا الَّذِيْنَ اُوْتُوْهُ مِنْۢ بَعْدِ
مَا جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ بَغْيًا ۢ بَيْنَهُمْ
فَهَدَى اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا
لِمَا اخْتَلَفُوْا فِيْهِ
مِنَ الْحَقِّ بِاِذْنِهٖ ۗ وَاللّٰهُ يَهْدِيْ مَنْ
يَّشَآءُ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ

(ஆரம்பத்தில்) மனிதர்கள் (அனைவரும்) ஒரே சமுதாயத்தவராகவே இருந்தனர். (அவர்கள் நேரான வழியில் செல்லும் பொருட்டு, நன்மை செய்வோருக்கு) நன்மாராயம் கூறும்படியும், (தீமை செய்வோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் படியும் அல்லாஹ் நபிமார்களை அனுப்பிவைத்தான் தவிர, அம்மனிதர்களுக்குள் ஏற்படும் விகற்பங்களைத் தீர்த்துவைக்கும் பொருட்டு, அவர்களோடு சத்திய வேதத்தையும் அருட் செய்தான். இவ்வாறு தெளிவான அத்தாட்சிகள் (உள்ள வேதம்) வந்ததன் பின்னர், அதனைப் பெற்றுக் கொண்ட அவர்கள், தங்களுக்குள் ஏற்பட்ட பொறாமையின் காரணமாகவே, (அந்த சத்திய வேதத்திற்கு) மாறு (செய்யமுற்) பட்டனர். ஆயினும், அவர்கள் மாறுபட்டுப் புறக்கணித்து விட்ட அந்த சத்தியத்தளவில் செல்லும்படி விசுவாசிகளுக்கு, அல்லாஹ் தன் அருளைக் கொண்டு (நேர்) வழி காட்டினான். இன்னும் (இவ்வாறே) தான் விரும்பியவரை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துகிறான்.

அல்குர்ஆன் : 2:213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org